நவம்பர் 2007 November | இதழ் 202 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION











Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

17 வது ஆண்டில்
th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# வரலாற்று மாதம்

இந்த மாதம் வரலாற்றுக்கும் வணக்கத்துக்கும் உரியது. மானிட சமூகம் தாம் நன்றி மறவாதது என்பதை உலகுக்கு எடுத்துகாட்ட இந்த மாதத்தைப் பயனுள்ளதாக்கியுள்ளது. நவம்பர் 11ம் திகதி, உலகப் போர்களில் உயிர் நீத்த படை வீரர்களுக்கான நாள். அன்றைய நாள் பதினொரு மணிக்கு எங்கும் இவர்களுக்கான அஞ்சலியும் நினைவுகூரலும் இடம்பெறும். இதற்கான 'பொப்பி' மலர் விநியோகம் ஏறத்தாழ மூன்று வாரங்களுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டது. அனைத்து மக்களும் வயது, பால் வேறுபாடின்றி 'பொப்பி' மலர்களை அணிந்து, மறைந்த போர் வீரர்களுக்கு மரியாதைபூர்வமாக வழங்கும் நினைவாஞ்சலி மதிப்புக்குரியது. இதற்கு எந்த வகையிலும் குறைவில்லாத வகையில் ஈழ விடுதலைக்காக உயிர் கொடுத்த மாவீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1990ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நவம்பர் 27ம் திகதியன்று தாயக உறவுகளும் புகலிடத் தமிழ் மக்களும் மாவீரர் நாளை அர்த்தம் நிறைந்த அறிவுடனும் உணர்வுடனும் தேசியத் தின வைபவம் போன்று போற்றி வருகின்றனர். ஏறத்தாழ இருபதாயிரம் தமிழ் வீரர்களை ஈழ விடுதலைப் போராட்டம் உரமாக்கியுள்ளது. இது மிகப்பெரிய விலை. தமிழினச் சுத்திகரிப்பை இலக்காகக் கொண்ட சிங்கள அரசுகள் தமக்குள் ஆட்சிக் கதிரைக்காக மோதிக்கொண்டாலும், தமிழின அழிப்பு நடவடிக்கையில் ஒத்த கருத்துள்ளவை. எப்போதும் ஆட்சிக்கு வரும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம், முன்னையதைவிட வேகம் கொண்டதாகவும், அராஜகமானதாகவும் அமைவது நியமமாகிவிட்டது. இன்றைய சிறீலங்கா ஜனாதிபதியின் ஆட்சிக்காலம், மிகக் கொடியது. தம்மை நவீன துட்டகைமுனுவாக (துஷ்ட-கெமுனு) உருவகம் செய்துகொண்டு, ஆயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்று வரும் சிங்கள ஜனாதிபதியை 'எல்லாளன் நடவடிக்கை' நிலைகுலைய வைத்துள்ளது. 'ராஜபக்ஷ கம்பனி'யின் அட்டகாசத்தை மூவேழு தியாகிகள் அடக்கியுள்ளனர் என்றால் அது புகழ்ச்சியல்ல. கடந்த ஓராண்டாக வெதும்பிக் கொண்டிருந்த புகலிட மக்கள் திடீரென நெஞ்சை நிமிர்த்தித் தோள்களை உயர்த்தி நிற்பதற்கு எல்லாளன் நடவடிக்கையில் தம்மை ஆகுதியாக்கிய அக்கினிக் குஞ்சுகளே மூலவர். உலகப் போரியல் வரலாற்றில் வைரம் பொறித்த மாவீரர்களை நெஞ்சில் இருத்தி வணங்குவது எம் கடமை. உலக வரைபடத்தில், இந்து சமுத்திரத்தின் அடியில், பாரதத்தின் கீழ்முனையில் தமிழன்னை பிரசவ வேதனையில் துடிப்பது தெரிகின்றது. இவள் எங்கள் தாய் என்ற உணர்வுடன் அந்த வேதனையை சுகப் பிரசவமாக்குவது எங்கள் கடமை. அதற்கான எங்கள் சூரியப் புதல்வனின் வரலாற்று உரையைக் கேட்க உலகமே தயாராகிக் கொண்டிருக்கின்றது.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

# பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர்

தமிழர் தகவலின் பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர் வேலைகள் நடைபெறுகின்றது.

இதுவரை ஐம்பது வீதமான கட்டுரைகள் எமக்குக் கிடைத்துள்ளன.

இந்த மாதம் (நவம்பர்) 30ம் திகதி வெள்ளிக்கிழமை வரை கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம்.

தமிழ்க் கட்டுரைகள் கடதாசியில் எழுதப்படுபவையாயின் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், கணினியில் அச்சடிக்கப்பட்டதாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

கடதாசியின் ஒரு பக்கத்தில் மட்டுமே இவை எழுதப்பட வேண்டும்.

கனடிய வாழ்க்கையின் அனுபவங்கள், கனடிய வாழ்வுக்குத் தேவையான விடயங்கள், கனடியக் கல்வி, பெற்றோரியம், சட்டம் ஓழுங்கு. புகலிட இலக்கியம், ஊடகத்துறை போன்ற தகவல்களைக் கொண்டதாக கட்டுரைகள் அமையலாம்.

தபாலில் அனுப்பும்போது பிரதி ஒன்றினை உங்களுடன் வைத்திருக்கவும்.

தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி:
17th Anniversary Issue.
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario
M4Y 2L4.

மேலதிக தகவல்கள் தேவையாயின் 416 920 9250 இலக்கத்துடன் பிற்பகல் வேளையில் தொடர்பு கொள்ளவும்.

# இந்திய உளவாளிகள் காது வழி நுழைகிறார்கள் எச்சரிக்கை!

கனடா திறந்த பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட ஒரு நாடு. இங்கு பொருட்களுக்குக் கட்டுப்பாட்டு விலை கிடையாது. விலைக்கட்டுப்பாடு அலுவலர்களும் இங்கு இல்லை. எவரும் எந்தப் பொருளையும் என்ன விலைக்கும் விற்கலாம்.

மலிவு விற்பனை, மூடு விழா விற்பனை, இறுதி விற்பனை என்ற பெயரில் அடிக்கடி நடைபெறும் சந்தைகளில் கொள்முதல் விலையிலும் குறைவாகப் பொருட்கள் விற்பனையாகும். இவற்றுள் 'டொலர்' கடைகளின் அதிசயம் இன்னொரு ரகம்.

E - commerce எனப்படும் online வர்த்தகம் ஆரம்பமான பின்னர் நிலைமை மேலுமொரு பரிமாணம் பெற்றது. ஏமாற்று மோசடிகள் ஒருபுறம்; உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மருந்து வகைகளின் தாராள விற்பனை இன்னொரு புறம்; விசா அட்டை, மாஸ்டர் கார்ட் சுத்து மாத்துகள் மற்றொரு புறம்.

இவற்றுள் இன்னொரு வகையானது, 'பிசினஸ் புறமோஷன்' என்ற பெயரில் நடைபெறும் தொலைபேசி ஊடான சேவைகள் (விற்பனை, பொருட்கள் அறிமுகம், திருத்தம், இன்னும் பல). இச்சேவை ஆளை ஆள் முகம் பார்க்காமல் தொலைபேசி உரையாடல் வழியாக நடைபெறுவது. பிரதான வங்கிகள், முன்னணிக் கம்பியுட்டர் விற்பனை/சேவை நிறுவனங்கள், இன்டர்நெட் சேவை-திருத்தம் என்பன இவ்வகையுள் முக்கியமானவை.

சில சேவைகளைப் பெறுவதற்கு உள்நாட்டு இலக்கங்களை அழைத்தால், சேவை வழங்குனர்கள் வெளிநாடுகளிலிருந்து உரையாடுவர். சில மாதங்களுக்கு முன்னர் கனடாவின் வேறு மாகாணங்களிலிருந்தும், வடஅமெரிக்காவின் வெவ்வேறு மாநிலங்களிலிருந்தும் சேவையாளர்கள் உரையாடுவர். இப்போது நிலைமை மாறிவிட்டது.

பல சமயங்களில் சேவை வழங்குனர்கள் இந்தியாவின் பிரதான நகரங்களான புதுடில்லி, ஹைதரபாத், சென்னை ஆகிய இடங்களிலிருந்து பதிலளிப்பர். கனடாவில் ஒரு அலுவலருக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு வழங்கும் சம்பளப் பணத்தில், அங்கு ஒருவரை எட்டு மணித்தியாலங்களுக்கு வேலைக்கு அமர்த்தலாம். அத்துடன் அலுவலக வாடகை உட்பட்ட இன்னோரன்ன செலவுகளும் வெகுகுறைவு.

இதனால் பல வடமெரிக்க நிறுவனங்களும் இந்திய மண்ணில் கால் ஊன்ற ஆரம்பிக்கின்றன. இதனால் இங்குள்ள பலரது சொந்த விபரங்களையும், தரவுகளையும் ஆளடையாளங்களையும் இந்திய அலுவலர்கள் இலகுவாகப் பெற முடிகிறது. முக்கியமாக இந்திய இராணுவ அட்டுழியத்தால் இங்கு அகதியுரிமை பெற்ற பல ஈழவர் பற்றிய விபரங்களை இந்தியா பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வுத் துறையின் உளவாளிகள் பலர் கம்பியுட்டரில் நன்கு தேர்ச்சி பெற்று, இவ்வாறான நிறுவனங்களில் பணிபுரிய 'உட்செலுத்தப்'பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது. இதற்கு உதாரணமாக கனடியத் தமிழர் இருவருக்கு அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

1. கம்பியுட்டர் திருத்தம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவன தொலைபேசி இலக்கத்தை அழைத்தபோது, ஹைதரபாத்திலிருந்து ஒருவர் உரையாடினார். சில நிமிடங்களின் பின்னர் இங்கிருந்து பேசுபவர் தமிழர் என்பதை அறிந்த அந்த அலுவலர் திடீரெனத் தமிழில் உரையாட ஆரம்பித்து, கனடாவிலுள்ள ஓரிரு தமிழர்களின் விலாசம், தொலைபேசி இலக்கம் போன்றவைகளை அறிய முனைந்தார்.

2. சென்னையிலிருந்து தொடர்பு கொண்ட ஒருவர், கனடாவின் வங்கியொன்றின் பெயரைக் குறிப்பிட்டு அதற்காகத் தாம் பணியாற்றுவதாகக் கூறி, புதிய சேவையொன்றை அறிமுகம் செய்ய முனைந்தார். அப்போது கனடிய ஆள் சம்பந்தமான சகல விபரங்களையும் குறிப்பிட்டு, "அவருடன்தானா பேசுகிறேன்?" என்றும் கேட்டார். கனடிய ஆள் உஷாரானதால், சென்னை ஆள் தொலைபேசி லைனைத் துண்டித்து விட்டார்.

இது பற்றி சம்பந்தப்பட்ட கனடிய வங்கியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, தங்களுக்கான அலுவலர்கள் கனடாவுக்கு வெளியே எவருமில்லை என்று பதிலளித்ததுடன், இது பற்றி பூரண விசாரணை நடத்துவதாக உறுதியளித்தனர்.

இந்திய உளவாளிகள் எங்கள் காதுகள் ஊடாக நுழைய எத்தனிக்கின்றனர். கவனம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# பக்கவாதம் நம்பக்கமே வேண்டாம்!

பருத்த உடல்குறைத்துப் பாழும் மதுவோ
டுருக்கும் புகைத்தல் உடனாய் - வருத்தும்
கொடுநீ ரிழிவும் குருதியழுத் தாதும்
தடுநீ தழைக்கும் நலம்.

வருமுன் காக்கக் கூடிய நோய்களின் வரிசையிலே பக்கவாதம் அல்லது பாரிசவாதம் என்னும் நோய் பற்றிய முக்கியமான தகவல்களை இக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கிறேன். Stroke அல்லது cerebro vascular accident என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்நோய் வடஅமெரிக்காவில் மரணத்தை ஏற்படுத்தும் முன்னணிக் காரணிகளுள் மாரடைப்பு, புற்றுநோய் ஆகியவற்றிற்கு அடுத்ததாகக் காணப்படுகின்ற ஆபத்தான ஆனால் ஓரளவு வராமல் தடுக்கக் கூடிய நோயாகும்.

பக்கவாதம் ஏற்படுபவர்களில் 3/4 பங்கினர் 65 வயதுக்கு மேற்பட்டவர்களாகக் காணப்பட்ட போதிலும் எந்த வயதினரையும் ஆண் பெண் இருபாலாரையும் இந்த நோய் பாதிக்கின்றது.

பக்கவாதம் அது ஏற்படுகின்ற தன்மையைப் பொறுத்து இரண்டு வகைப்படுகிறது. மிகவும் பொதுவாகக் காணப்படுவது Ishaemic stroke எனப்படுவதாகும். 80 வீதமானோர் இந்த வகைப் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகிறார்கள். மூளைக்குக் குருதி விநியோகம் செய்யும் குருதிக் குழாய் ஒன்றில் அடைப்பு ஏற்படும் போது மூளைக்குக் குருதி விநியோகம் தடைப்பட்டுப் போவதால் இந்தவகைப் பக்கவாதம் ஏற்படுகிறது.

குருதிக் குழாய் வெடித்து மூளைக்குள் குருதிப் பெருக்கு ஏற்படுவதால் உண்டாகும் பக்கவாதம் இரண்டாவது வகையாகும். இது மூளையின் நாடிச் சுவரில் ஓரிடத்தில் அசாதாரணமாக காணப்படும் aneurism என அழைக்கப்படும் மென்மையான பகுதி நாளடைவில் விரிவடைந்து வெடித்து மூளைக்குள் குருதிப் பெருக்கை ஏற்படுத்துவதால் உண்டாகின்றது.

நாடிச் சுவர்களிலேற்படும் கொழுப்புப் படிவுகளாலும் நாடிச்சுவர் தடிப்படைந்து வெடிக்கக் கூடும். ஒருவரில் உயர் குருதியமுக்கம் காணப்படும் போது இந்த நாடிகள் வெடிக்கக் கூடிய சந்தர்ப்பம் அதிகரிக்கிறது.

இந்த இரண்டு வகைகளுமே மூளையின் கலங்களை இறந்து போகச் செய்து அதன் தொழிற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தி இறப்பை அல்லது நிரந்தரமான அங்கவீனத்தை விளைவிக்கின்றன.

இதைவிட சிலவேளைகளில் குருதிக் குழாயிலுள்ள பூர்த்தியற்ற அடைப்பினால் வழமையிலும் பார்க்கக் குறைந்த அளவு குருதி விநியோகம் மூளைக்குச் செல்கின்றபோது பக்கவாதத்துக்குரிய சில குணங்குறிகள் இலேசாக ஏற்பட்டு குறுகிய நேரத்துக்குள் மறைந்து விடலாம். இதை transient ishaemic attack (TIA) அல்லது mini stroke என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இந்தப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு பின்னால் பெரிய அளவிலான பாதிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகம் என அறியப்படுகிறது.

இந்த நோயினால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?
மூளையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு எந்த வகையானது, மூளையின் எந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, எவ்வளவு தூரம் பாதிப்பின் அளவு இருக்கின்றது என்பதைப் பொறுத்து விளைவுகள் ஏற்படலாம். இலேசான பாதிப்பு மூளையில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் போகலாம். அதேவேளை பெரிய அளவிலான பாதிப்பு மூளைக் கலங்களில் பாரிய அழிவை ஏற்படுத்தி அதனால் கடுமையான அங்கவீனத்தையோ அல்லது இறப்பையோ உண்டாக்குகின்றது.

பக்கவாதம் ஏற்பட்டிருப்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்?
முகம், கை கால் ஆகியவற்றில் பிரதானமாக ஒரு பக்கத்தில் திடீரென விறைப்பு அல்லது சோர்வு, ஒரு கண்ணில் அல்லது இரண்டு கண்களிலுமே திடீரெனப் பார்வைக் கோளாறு, திடீரெனப் பேச்சில் தெளிவின்மை அல்லது பேசமுடியாமல் போதல், திடீர் தலைவலி, தலைச்சுற்று, குமட்டல், வாந்தி, மாறாட்டம், ஞாபக மறதி, கால்களிற் சோர்வு, பலவீனம் ஆகியவற்றால் நடக்க முடியாது போதல் போன்றவை பக்கவாதத்துக்கான அறிகுறிகளாகும். பக்கவாத நோயை மிக விரைவாகவும் அதன் வகையைத் துல்லியமாகவும் கண்டு பிடிக்க உதவும் பரிசோதனை முறைகள் தற்போது இலகுவில் கிடைக்கின்றன.

நோயாளியில் காணப்படுகின்ற அறிகுறிகளைக் கொண்டு நோயாளியின் நரம்பு மண்டலத்தின் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா என மருத்துவரால் உடற் பரிசோதனை செய்து பார்க்கப்படுவது பரிசோதனை முறைகளின் முதற் படியாகும். அதன் பின்பு CT scaning அல்லது MRI போன்ற தொழில்நுட்ப முறைகளின் மூலம் மூளையின் எல்லாப் பகுதியையும் பகுத்தறிந்து மூளையில் உண்மையாகப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்பதையும், எந்த வகையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சில நிமிடங்களுக்குள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பக்கவாதத்தை எப்படித் தடுக்கலாம்?
பக்கவாதம் 80 வீதம் தடுக்கப்படக் கூடியதும் குணப்படுத்தக் கூடியதுமான நோயாகும். கடந்த இரு தசாப்தங்களாக மக்களிடையே இந்த நோய் பற்றி ஏற்பட்ட விழிப்புணர்வினாலும் அதைத் தொடர்ந்து மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட வாழ்க்கைமுறை மாற்றங்களினாலும் இந்த நோயினால் ஏற்படக்கூடிய இறப்பு வீதம் சரி பாதியாகக் குறைந்துள்ளது என ஆய்வுகள் மூலம் அறியப்படுகிறது. பக்கவாதத்தை ஏற்படுத்தும் காரணிகளில் மரபு, வயது ஆகிய சில காரணிகளைத் தவிர கீழே தரப்பட்டுள்ள மற்றைய காரணிகளை ஒன்றில் தவிர்க்கவோ அல்லது கட்டுப்படுத்தக் கூடியதாகவோ இருப்பதால் இந்நோயை 80-90 வீதம் வராமல் காக்க முடியும். இவை குருதிக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தும் தூண்டற் காரணிகளாக இருக்கின்றன.

### புகைப்பிடித்தல்
புகைப்பிடிக்கும் பழக்கம் இருப்பவர்கள் முதலில் அதை நிறுத்த வேண்டும். புகைப்பிடிக்கும் பழக்கம் மாரடைப்பு பக்கவாதம் போன்ற பல ஆபத்தான நோய்களுக்கு அடித்தளம் இடுகிறது. சிகரட் என்பது நமக்கு நாமே வைக்கும் கொள்ளிக் கட்டை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். புகைப்பிடிப்பதை நிறுத்த முடியாமல் சிரமப்படுபவர்களுக்கு அதை நிறுத்துவதற்கான மருத்துவ முறைகளும் இருக்கின்றன.

### உயர் குருதியமுக்கம்
உயர் குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மிகவும் இன்றியமையாதது. சென்ற மாத இதழில் உயர் குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி எழுதியிருந்ததை வாசகர்கள் வாசித்து அறிந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

### நீரிழிவு
நீரிழிவு என அழைக்கப்படும் சர்க்கரை நோயுள்ளவர்கள் அதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை அறிந்து அவற்றைச் செயற்படுத்த வேண்டும். இனி வரும் இதழ்களில் நீரிழிவு பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள இருக்கின்றேன்.

அதிகரித்த உடற்பருமன்
அதிகரித்த உடற்பருமன் உள்ளவர்கள் நலம் தரும் உணவுப்பழக்க வழக்கத்தையும் ஒழுங்கான உடற்பயிற்சி முறைகளையும் மேற்கொண்டு உடல் நிறையைக்

(22ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் வாழ்வு

# ஒன்றாறியோ மாகாணத் தேர்தலில் கற்ற பாடமும் பெற்ற பயிற்சியும்

கடந்த மாதம் பத்தாம் திகதி நடைபெற்ற மாகாணத் தேர்தலில் ஏற்கனவே ஆட்சியிலிருந்த டால்ரன் மக்கன்ரியின் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக கன்சர்வேடிவ்வும், அடுத்த இடத்தை என். டி. பியும் பெற்றுள்ளன.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட வேளையில் லிபரல் செல்வாக்கு இழந்து காணப்பட்டது. முன்னைய தேர்தலில் அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, சொன்னவைகளை மீறிச் செயற்பட்டமை போன்றவைகளால் லிபரல் தள்ளாட்ட நிலையில் இருந்தது என்றும் சொல்லலாம்.

கன்சர்வேடிவ் தலைவர் ஜோன் ரோறி தாம் ஆட்சிக்கு வந்தால் மதப் பாடசாலைகளுக்கு அரச உதவி வழங்கப்படும் என்று தெரிவித்தது விசக்காய்ச்சலாக மாற, அதற்கு எதிரான பிரசாரத்துக்குள் லிபரல் கட்சியின் தள்ளாட்டம் மறையுண்டு, புதிய அலையொன்று அதற்குச் சாதகமாக மாறியது.

இதனை முன்கூட்டியே நன்றாக அறிந்திருந்த என் டி. பி. தலைவர் ஹொவ-ார்ட் ஹாம்ப்டன், பொதுமக்களையும் பிரதான ஊடகங்களையும் எச்சரித்திருந்தார். வெற்றி லிபரல் பக்கம் திரும்புமென்று அவர் உணர்ந்தது சரியானது.

ஆக, லிபரல் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு ஜோன் ரோறியே உதவினார் என்றாயிற்று. இதற்கான பரிசை அவர் போட்டியிட்ட டொன்வலி மேற்குத் தொகுதி மக்கள் அவருக்கு வழங்கினார்கள் என்று சொல்லலாம். இத்தொகுதியின் உறுப்பினராக இருந்தவர் லிபரலின் கல்வி அமைச்சர் கத்லின். கன்சர்வேடிவ் தலைவரைத் தோற்கடித்த பெருமை பெற்ற கத்லின் மீண்டும் புதிய அமைச்சரவையில் கல்வி அமைச்சையே தமக்குரிய வெகுமதியாகப் பெற்றுள்ளார்.

தேர்தல் முடிவுகள், குயின்ஸ்பார்க் ஆட்சி அமைப்பில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. ஆனால், நான்காண்டுகளுக்கு முந்திய தேர்தலுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் பிரதான இரு கட்சிகளும் பெற்ற வாக்குகள் இம்முறை குறைந்துள்ளது தெரியும்.

2003ம் ஆண்டு நடைபெற்ற மாகாணத் தேர்தலில், லிபரல் 46.5 வீத வாக்குகளைப் பெற்று 72 ஆசனங்களைக் கைப்பற்றியது. கன்சர்வேடிவ் 34.7 வீத வாக்குகளைப் பெற்று 24 ஆசனங்களில் வென்றது.

ஆனால் கடந்த மாதத் தேர்தலில் லிபரல் 42.1 வீத வாக்கினை மட்டுமே பெற்று, 71 ஆசனங்களில் வென்றது. கன்சர்வேடிவ் 31.5 வீத வாக்குகளைப் பெற்று 26 ஆசனங்களில் வென்றது.

2003ம் ஆண்டுத் தேர்தலில் 103 தொகுதிகள் மட்டுமே இருந்தன. இம்முறை நான்கால் அதிகரித்து 107 ஆகியுள்ளது. இதனைக் கவனித்தால் லிபரலின் செல்வாக்கு எவ்வளவு சரிந்துள்ளது என்பது புரியும்.
இன்னொரு விடயத்தையும் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். என். டி. பி கட்சியும், பசுமைக் கட்சியும் (Green Party) விகிதாசார அடிப்படையில் வாக்கு வங்கியை அதிகரிக்கச் செய்துள்ளதை அவதானிக்கலாம்

2003ம் ஆண்டுத் தேர்தலில் 14.7 வீத வாக்கினைப் பெற்று 7 ஆசனங்களில் மட்டுமே வென்ற என் டி. பி, இம்முறை 17 வீத வாக்குகளைப் பெற்று பத்து ஆசனங்களில் இலகுவாக வென்றுள்ளது. பசுமைக் கட்சிக்கு எட்டு வீத வாக்குகள் கிடைத்தும், தொகுதி அடிப்படையில் வெற்றி தோல்வி நிச்சயிக்கப்படும் முறையினால் இதற்கு ஒரு ஆசனமும் கிடைக்கவில்லை.

தமிழர்கள் போட்டியிட்ட தொகுதிகள் பற்றி மேலோட்டமாகப் பார்ப்போம் மூவர் என் டி. பி சார்பிலும் ஒருவர் கன்சர்வேடிவ்விலுமாக மொத்தம் நான்கு தமிழர் களத்தில் நின்றனர். ஸ்காபரோ கில்ட்வூட்டில் நீதன் சண்முகராஜாவும், ஸ்காபரோ மத்திய தொகுதியில் சாமி அப்பாத்துரையும் முறையே என் டி. பி, கன்சர்வேடிவ் சார்பில் போட்டியிட்டு, பிரசாரத்தை முனைப்புடன் மேற்கொண்டிருந்தனர். ஸ்காபரோவின் ஆறு தொகுதிகளிலும் கன்சர்வேடிவ் இரண்டாவதாக வந்தது. சாமி அப்பாத்துரை அக்கட்சியில் போட்டியிட்டு 8336 வாக்குளைப் பெற்றும், இரண்டாவதாகவே வர முடிந்தது.

நீதன் பற்றிக் கடந்த இதழில் குறிப்பிடுகையில், "நீதனுக்கான வெற்றி வாய்ப்பு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பதினையாயிரம் வாக்குகளை நீதன் பெறுவாரானால் வெற்றி நிச்சயம். தமிழர்களும் மற்றும் சிறுபான்மை இனங்களும் ஒன்றிணைந்து வாக்களிப்பின் இது இலகுவானது" என்று குறிப்பிட்டிருந்தேன். தமிழர்கள் ஒன்றுபட்டு இயங்காததால் நீதனுக்குப் பதினையாயிரம் வாக்குகள் கிடைக்கவில்லை. அதனால், 14,415 வாக்குகளைப் பெற்ற லிபரல் வேட்பாளர் மார்கிரட் பெஸ்ற் வெற்றி பெற்றார்

ஆனால், ஸ்காபரோவின் ஆறு தொகுதிகளிலும் போட்டியிட்ட என் டி. பி. வேட்பாளர்கள் தத்தம் தொகுதிகளில் பெற்ற வாக்குகளைப் பார்க்கையில், நீதனே கூடிய வாக்குகளைப் பெற்றது தெரிகின்றது. விபரம் இது: ஸ்காபரோ மத்தி-கதலின்: 4401, ஸ்காபரோ தென்மேற்கு-ஜேய் சர்க்கார்: 5930, ஸ்காபரோ ஏஜின்கோர்ட்-ஜுவற் பிளாக்பேர்ம்: 3091, ஸ்காபரோ றுஜ்றிவர்-ஷிலா வைற்: 4059, ஸ்காபரோ கில்ட்வூட்-நீதன்: 7442, பிக்கரிங் ஸ்காபரோ கிழக்கு-ஆட்றி: 2535.

என் டி. பி கட்சி ஆதரவும் நீதனின் செல்வாக்குமே இவ்வளவு வாக்குகளை அவர் பெறக் காரணமாக இருந்தது. அதேசமயம் தொண்டர் பற்றாக்குறை, தேர்தல் பிரசாரப் பணியாளரின் முன்னனுபவமின்மை போன்ற தேக்கநிலைகளும் இங்கு காணப்பட்டன. 'நீதனுக்கு வெற்றி நிச்சயம்' என்று கண்களை மூடிக்கொண்டு சிலர் நடத்திய பரப்புரையும் வாக்குத் தொகை குறைவுக்கு ஒரு முக்கிய காரணம். 'நீதன் வெல்கிறார்தானே, எனது ஒரு வாக்கு இல்லாவிட்டால் என்ன?" என்று பலரும் நினைத்திருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான வாக்காளர் இறுதி நேரத்தில் வாக்களிக்கச் செல்லாதிருந்ததற்குக் காரணம் என்ன!

நீதனுக்கு எதிராக சில விஷமிகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. "தமிழ்ப் பயங்கரவாதிகள் குழுவைச் சேர்ந்தவர் நீதன்" என்ற பொருள்பட விஷமத்தனமான பிரசாரத்தில் சிலர் தீவிரமாக ஈடுபட்டனர். வாக்களிப்பு தினத்தன்றும் இது இடம்பெற்றது. முன்னர் கேள்விப்படாத சங்கங்களின் பெயர்களில் விஷமப் பிரசுரங்களை பறக்க விட்டிருந்தார்கள். தமிழன் ஒருவன் வெற்றிபெறக் கூடாது என்பதில் சில தமிழர்களே முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

**உக்கிரன் பார்வை**

ஏஜக்ஸ் பிக்கரிங் தொகுதியில் பாலா தவராஜசூரியர் 3263 வாக்குகளையும், மிசிசாகா கிழக்கு குக்ஸ்வில் தொகுதியில் சதீஷ் பாலசுந்தரம் 3164 வாக்குகளையும் பெற்றனர். இருவரும் என் டி. பி. கட்சி வேட்பாளர்களாக நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் தொடர்

பகுதி
20

# காதில் விழுந்தவை

242. *சல்மன் ருஷ்டி எழுதிய The Satanic Verses என்ற புதினம்* (2007-06-18). Novel என்பதை வழமைபோல் நாவல் என்று குறிப்பிடாது, *புதினம்* என்று குறிப்பிட்டதே இதிலுள்ள புதினம்! Novel என்பதன் ஒலிபெயர்ப்பே நாவல். தமிழில் எழுந்த முதல் நாவல்: *பிரதாப முதலியார் சரித்திரம்* (1876). அந்த நாவலை எழுதிய ச.வேதநாயகம் பிள்ளை (1879-1889) அதனை *உரைநடை நவீனம்* என்றும், *வசன காவியம்* என்றும் குறிப்பிட்டுள்ளார். பிற்பாடு இது *நவீனம்* என்றும் *புதுமை* என்றும்..... கொள்ளப்பட்டது. நாளடைவில் **நாவல்** வேரூன்றிவிட்டது. *புதினம்* (news), *புதுமை* (novelty), *நாவல்* (novel) என்னும் பெயர்ச் சொற்கள் உணர்த்தும் பொருள் நுணுக்கமாய் வேறுபடுவது கவனிக்கத்தக்கது. Novel பெயரடையாய் அமையும் பொழுது *புதுமையான* என்று பொருள்படும். *புதுமையான எண்ணம்* (novel idea).

251. *சீனாவின் ஆளுமையைச் சமன்படுத்துவதற்காகவே அமெரிக்கா, இந்தியா, யப்பான் ஆகிய நாடுகள் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளன* (2007-08-21). *ஆளுமை* (personality) என்பது ஆள் (person) தொடர்பானது, உயர்திணைக்குரியது. அது நாடு தொடர்பானதல்ல, அஃறிணைக்குரியதல்ல. இதற்குள்ள விதிவிலக்குகளை மறுப்பதற்கில்லை. எவ்வாறாயினும், *மாவோவின் ஆளுமை* என்பது சாலவும் பொருந்தும். *சீனாவின் ஆளுமை* என்பது அறவே பொருந்தாது. இத்தமிழாக்கத்தின் தோற்றுவாய் தெரியவில்லை. To balance அல்லது to neutralize China's influence அல்லது clout அல்லது dominance அல்லது ascendancy... என்பது *சீனாவின் ஆளுமையைச் சமன்படுத்துவதற்காக...* என்று பெயர்க்கப்பட்டிருக்கலாம். சீனாவின் **செல்வாக்கை** அல்லது **திமிரை** அல்லது **ஆதிக்கத்தை** அல்லது **மேலாண்மையை...**

252. *ஈராக்கியப் பிரதமர் அல் மலிக்கி தனது அரசு மீதான விமர்சனங்களை அநாகரிகமானவை என்று கண்டித்துள்ளார்* (2007-08-22). இதன் தோற்றுவாய்: Al-Maliki, on a trip to Syria, reacted harshly when asked about the earlier comments from U.S. officials... Without naming any American officials, al-Maliki said some of the criticism of him and his government had been discourteous (CNN, 2007/08/22).

(1) Comment என்பது *கருத்துரை* என்று பொருள்படுவதுண்டு. அந்த வகையில் Discouteous (comments) என்பது **மரியாதை தொனிக்காத (கருத்துரைகள்)** ஆகும். இத்தொடரை *அநாகரிகமான விமர்சனங்கள்* என்பது வழுபடக் கூறல் அல்லது மிகைபடக் கூறல்.

(2) *திறனாய்வு, விமர்சனம், குறைநிறை, critique, criticism* என்பன பெரிதும் ஒத்த பொருளை உணர்த்த வல்லவை. எடுத்துக்காட்டாக, literary criticism என்பது *இலக்கியத் திறனாய்வு (அல்லது இலக்கிய விமர்சனம்)* என்று பொருள்படுமேயொழிய, *இலக்கியக் கண்டனம்* என்று பொருள்படாது.

(3) *திறனாய்வு, விமர்சனம், critique* என்பன குறையையும் நிறையையும் குறிப்பதால், அவை வெறும் கண்டனம் ஆகா. ஆனால், *criticism* என்பது (அ) *திறனாய்வு* அல்லது *விமர்சனம்* என்று மட்டுமல்லாது, (ஆ) *கண்டனம்* என்றும் பொருள்படும். எடுத்துக்காட்டாக, *criticism* from Amnesty International on human rights abuses என்பது மனித உரிமை மீறல்கள் குறித்து உலக அபயத் தாபனம் விடுக்கும் *கண்டனம்* ஆகும். இது குறையை (மனித உரிமை மீறல்களை) மட்டும் குறிப்பதால் கண்டனம் என்பது தெளிவு. *விமர்சனம்* அல்லது *(திறனாய்வு)* என்பது குறையையும் நிறையையும் குறிப்பது. மனித உரிமை மீறலை ஒரு நிறை என்று கொள்ள முடியாது. ஆகவே இதனை, மனித உரிமை மீறல்கள் குறித்து உலக அபயத் தாபனம் விடுக்கும் *விமர்சனம்* என்பது அடக்கி வாசிப்பதாகும்.

(4) *விமர்சனம், கண்டனம்* இரண்டும் ஒத்த சொற்களாகக் குழப்பியடிக்கப்படுவதற்கான காரணம்: *criticism* என்பது (அ) *விமர்சனம்* (திறனாய்வு, குறைநிறை, critique) என்றும் (ஆ) *கண்டனம்* (censure=condemnation) என்றும் பொருள்படுவதே. இது மொழியில் உள்ள வழு அல்ல. மொழிபெயர்ப்பில் உள்ள வழு. ஒத்த சொற்களைக் கொண்ட பின்வரும் இரு வரிகளிலும் **criticism** இடம்பெறுவது இதனை உணர்த்துகிறது.

(அ) திறனாய்வு = குறைநிறை = விமர்சனம் = critique = **criticism**
(ஆ) கண்டனம் = censure = condemnation = **criticism**

253. *ஈராக்கியப் பிரதமரை விமர்சித்ததற்கு தாம் மன்னிப்புக் கோருவதாக பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்* (2007-08-27). மேலே இழைக்கப்பட்ட அதே தவறு இங்கும் இழைக்கப்பட்டுள்ளது. *விமர்சனம்* வரவேற்கப்படுவது. அதற்காக எவரும் மன்னிப்புக் கேட்பதில்லை. கண்டனம் வெறுக்கப்படுவது. அதற்காக ஒருவர் மன்னிப்புக் கேட்பதுண்டு. ஈராக்கியப் பிரதமரைக் **கண்டித்ததற்கு** தாம் மன்னிப்புக் கோருவதாகப் பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

254. *அமெரிக்காவின் தலைமை வழக்கறிஞர் அல்பேட்டோ கொன்சாலிஸ் இராஜினாமா செய்துள்ளார்* (2007-08-27). Attorney-General இங்கு தலைமை வழக்கறிஞர் ஆகியுள்ளார். Attorney-General என்பவர் Head of the Department of Justice ஆவார். ஈழநாட்டு ஊடகங்கள் இவரை *சட்ட மா அதிபர்* என்பதுண்டு. ஈழநாட்டுச் சொல்-தொகுதிகளில் **சட்டத்துறை அதிபதி** என்னும் பதம் காணப்படுகிறது.

255. *அல்பேட்டோ கொன்சாலிஸ் அதிகப்படியான அழுத்தத்தைச் சந்தித்தார்* (2007-08-27). Alberto Gonzalis faced heavy pressure அல்லது அத்தகைய ஒரு வசனமே இவ்வாறு பெயர்க்கப்பட்டுள்ளது. அல்பேட்டோ கொன்சாலிஸ் **மிகுந்த நெருக்குதலை (அல்லது மிகுந்த நிர்ப்பந்தத்தை) எதிர்கொண்டார்.**

256. *அல்ஷைமர் என்னும் மூளை அழுகல் நோய்* (2007-08-28). Alzheimer's disease என்பது *ஒரு கடுமையான மூளைக் குழப்பம். முதுமை அடைய முன்னரே உண்டாகும் தளர்ச்சி அதனைப் புலப்படுத்தும்* - a serious disorder of the brain manifesting itself in premature senility - (Oxford). அதன் அறிகுறிகள்: *மறதி, கற்கவோ நினைவுகூரவோ இயலாமை, புலனை ஒருமுகப்படுத்தும் ஆற்றலும் உடல்தூய்மையும் நினைவாற்றலும் மொழியாற்றலும் உடலியக்கமும் அறிவாற்றலும் உடல்வலுவும்... குன்றுதல்* (Encyclopedia & Dictionary of Medicine, Nursing & Allied Health). இது மூளை அழுகுவதையல்ல, தளர்வதையே குறிக்கிறது. Alzheimer's disease என்பது **மூளைத்தளர்ச்சி நோய்** ஆகும்.

257. *ஆளில்லா வேவு விமானத்தின் இரவு நேரப் பிரசன்னம் வன்னிவாழ் மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது* (2007-08-29). ஆளில்லா வேவு விமானத்தின் இரவுநேர **நடமாட்டம்...**

258. *இலங்கை அரசாங்கம் பல புதிய வரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது* (2007-09-02). The government of Sri Lanka has introduced several new taxes போன்ற ஓர் ஆங்கில வசனமே அவ்வாறு பெயர்க்கப்பட்டுள்ளது. Introduce என்பது (1) *அறிமுகப்படுத்து*, (2) *புகுத்து*, (3) *முன்வை*... என்றெல்லாம் பொருள்பட வல்லது. (1) இருவரை ஒருவர் அறிமுகப்படுத்துவதற்கும், (2) ஆட்சியாளர் ஒரு வரியைப் புகுத்துவதற்கும், (3) ஆட்சி மன்றத்தில் ஒரு திட்டத்தை முன்வைப்பதற்கும்... இடையே பொதிந்துள்ள நுண்ணிய வேறுபாடு பேணப்பட வேண்டும். **இலங்கை அரசாங்கம் பல புதிய வரிகளைப் புகுத்தியுள்ளது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் 11 - ஞாபகார்த்த தினம்
# November 11th - Rememberance Day

நவம்பர் மாதம் 11ம் திகதியை கனடாவில் இருக்கும் நாம் மறக்க முடியாதபடி இங்குள்ளவர்கள் அணியும் பொப்பி மலர் ஞாபகம் ஊட்டியபடியே இருக்கும். பதினோராம் மாதம், பதினோராம் திகதி, பதினொரு மணிக்கு ஒரு நிமிடமோ, அல்லது இரண்டு நிமிடமோ மௌனம் அனுஷ்டித்து நீதிக்காகவும், சமாதானத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்த ஆயிரக் கணக்கான வீரர்களை இந்நாட்டில் நினைவு கூருகின்றோம். இது எம்மவர் மனதை நெகிழச் செய்யும் ஒரு நிகழ்ச்சியாகும். போர் என்றால் என்ன, அதன் தாக்கங்கள் யாவை, அதில் உயிரிழந்தோரின் மதிப்பு என்ன, அதனால் ஏற்பட்ட அங்கயீனங்கள் என்ன, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட அனர்த்தங்கள் யாவை, எத்தனை குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டார்கள், எவ்வளவு பெண்கள் விதவைகள் ஆனார்கள், எத்தனை தாய்மார்கள் தமது புத்திரச் செல்வங்களை வாழவேண்டிய வயதில் பறிகொடுத்தார்கள், எவ்வளவு பொருட்சேதம் ஏற்பட்டது, இன்னும் என்னவெல்லாம் இன்னல்களை போர் மக்களுக்கு ஏற்படுத்தியது என்பதனை அனுபவ மூலமாக அறிந்து, இன்னுமே அதன் தாக்கங்களிலிருந்து மீள முடியாமல் அல்லலுறும் இனம் எமது இனம். எத்தனை போர்கள் உலகளாவிய ரீதியில் நடந்து முடிந்துவிட்டன. ஆனால் எமது நாட்டிலோ இது ஒரு முடிவில்லாத தொடர்கதையாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்த ஞாபகார்த்த தினம் போன்ற ஒரு நாள் எமது நாட்டிலும் நடைபெற மாட்டாதா என்று எம்மவரால் ஏங்காமல் இருக்க முடியாது.

முதலாவது உலக மகாயுத்தம், இரண்டாவது உலக மகாயுத்தம், கொரியன் யுத்தம், ஆப்கானிஸ்தான் யுத்தம், முதலியவற்றிலும் வேறு அமைதி காக்கும் பணிகளிலும் உயிர் இழந்தோரை நவம்பர் 11ம் திகதி நினைவு கூருகிறோம். முதலாம் உலக மகாயுத்தம் 1914-1918 வரை நடை பெற்றது. இதில் 600,000 கனடிய சிப்பாய்கள் பங்குபற்றினார்கள். யுத்தத்தின் முடிவில் 60,000 சிப்பாய்கள் வீர மரணம் அடைந்தனர், 69,000 சிப்பாய்கள் காயமடைந்தனர். இரண்டாம் உலக மகாயுத்தம் 1939-1945 வரை நடைபெற்றது. இதில் ஒரு கோடிக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் பங்குபற்றினார்கள். இதில் 47,000 போராளிகள் நாடு திரும்பவில்லை. கொரியாவில் 1950-53 வரை நடைபெற்ற போருக்கு, 26,791 கனடிய போர் வீரர்கள் சென்றனர். அவர்களில் 516 பேர் இறந்தனர். யுத்தங்களில் தமது உயிரைப் பணயம் வைத்த மாவீரர்களை நினைவுகூரும் இந்நாளை கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவில் ஞாபகார்த்த நாள் என்றும், தென் ஆபிரிக்கா, மோல்டாவில் பொப்பி தினம் என்றும், ஐக்கிய அமெரிக்காவில் Veterans Day என்றும், நியூசிலாந்து, பிரான்ஸ், கொமன்வெல்த் நாடுகளில் Armstice Day என்றும் அழைக்கிறார்கள். பெயர்களில் மாறுபாடுகள் காணப்பட்டாலும் அடிப்படையில் இத்தினம் போர்களில் தமது உயிரைத் தியாகம் செய்த வீரர்களைக் கௌரவிப்பதற்காகவே ஏற்பட்டது. இக் கொண்டாட்டத்தை முதன்முதலாக நவம்பர் ஏழாம் திகதி 1919ல் ஐந்தாம் ஜோர்ஜ் இளவரசர் ஆரம்பித்து வைத்தார். அன்று தொடக்கம் இற்றைவரை இத்தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இது ஒரு பொதுவான விடுமுறை தினமன்று. ஆனால் Canada Federal ஊழியர்களுக்கு




**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா


மாத்திரம் இது ஒரு விடுமுறை தினமாகும். பாடசாலைகளில் இத்தினத்தில் மாணவர்களுக்கு உலகப் போர்களின் வரலாறுகளை அறியத் தரும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். இன்றும் உயிரோடு இருக்கும் இரண்டாம் உலகப் போரில் பங்குபற்றிய ஒரு சிலர் பாட-சாலைகளுக்கு வருகை தந்து தமது போர் அனுபவங்களை மாணவர்களோடு கலந்து உரையாடுவார்கள். உலக அமைதிக்கான பிரார்த்தனைகளும் நடைபெறும். இத்தினத்தில் சிவப்பு நிறமான பொப்பி மலரினை இங்குள்ளோர் அணிந்து திரிவதை அவதானிக்க முடியும். நவம்பர் 11ம் திகதிக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்பு இதனை அணியத் தொடங்கலாம். நவம்பர் 11க்கு பின்பு இதனை அணியக் கூடாது. அதன் பின்பு அதனை ஒன்றில் வீசி விடவேண்டும், அல்லது ஒரு வீரனின் கல்லறையில் போட்டுவிட வேண்டும் என்பது வழக்கம்.

இந்தப் பொப்பி மலர் எவ்வாறு போரின் ஞாபகச் சின்னமாக வந்தது எனில் Flanders என்னும் இடத்தில் யுத்த வீரர்களின் உடல்கள் பெருமளவில் புதைக்கப்பட்டன. அங்கு பொப்பி மரங்கள் தோன்றி பொப்பி மலர் வயல்களாகக் காட்சியளித்தது. இவை பூத்துக் குலுங்கிய பொழுது எங்கும் ஒரே சிவப்பு மயமாக இருந்தது. இம்மரங்கள் இங்கு தோன்றக் காரணம் யாதெனில் இப் பயிர்கள் வளர்வதற்குச் சுண்ணாம்புச் சத்து அதிகம் தேவைப்படுகிறது. வீரர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட பின்பு அவர்களின் உக்கிய எலும்புக் கூட்டிலிருந்து வெளிப்பட்ட சுண்ணாம்புச் சத்தே இவ்வாறு ஆயிரக் கணக்கான பொப்பி மலர்கள் நிறைந்த வயல்கள் தோன்றக் காரணமாயின. ஆகவே யுத்தத்தோடு பொப்பி மலரையும் இணைத்து அதனை ஒரு யுத்த நினைவுச் சின்னமாகக் கொண்டாடும் வழக்கத்தை பிரான்ஸ் நாட்டில் ஏற்படுத்தினார்கள். Anne Gueria என்னும் பிரான்ஸ் நாட்டுப் பெண்மணி விதவைகள் தமது மடியில் தகப்பன் இல்லாத சிறுகுழந்தைகளை வைத்திருந்தபடி இப்பூக்களை செயற்கையாத் தயாரிக்கும் படங்களை எடுத்து இதனை விளம்பரப்படுத்தினார். இதனால் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மேல் பலருக்கும் இரக்கமும், கருணையும் ஏற்பட்டது. இவர்கள் தைத்து ஏற்றுமதி செய்த கோடிக்கணக்கான பொப்பி மலர்கள் உலகம் முழுவதும் விற்பனையாகின. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு நாட்டவரும் தமக்குத் தேவையான பொப்பி மலர்களைத் தாமே தயாரிக்கிறார்கள். இவ்வாறு பொப்பி மலர் விற்பனை மூலம் பெறப்படும் வருமானம் யுத்தத்தில் பங்குபற்றி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண், பெண், ஊழியர்களுக்கு உதவி செய்யப் பயன்படுகிறது. (Ex-Service Men & Women). இலங்கையிலும் உலகப் போர் முடிவடைந்த காலத்தில் பொப்பி மலர் விற்பனைக்கு எதிராக மஞ்சள் நிறத்தில் சூரியகாந்திப் பூக்கள் சூரிய மலர் இயக்கத்தினால் (Suriyal Mal Movement) விற்கப்பட்டன. ஏனெனில் பொப்பி மலர் விற்பனையால் கிடைத்த வருமானம் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டதே காரணமாகும். தற்பொழுது பொப்பி மலர் விற்பனைப் பணம் சுதேசிப் போர் வீரர்களின் தேவைகளுக்குப் பயன்படுகிறது.

போரின் தாக்கங்கள் பற்றி எமது தாய்மண்ணில் வாழும் குழந்தைகளுக்குத் தெரிந்த அளவு இங்கு வாழும் எந்த ஒரு குழந்தைகளுக்கும் தெரிந்திருக்க முடியாது. நாளாந்தம் ஒவ்வொரு நிமிடமும் போர்ச் சூழலில் வாழ்ந்து, வதங்கிக் கொண்டிருக்கும் எமது குழந்தைகளுக்கு

(மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்
**கனடியக் காட்சிகள்**

# போனமாதப் பலன்கள்

1. எப்படி என்ரை பேச்சு?
மோசம்.
நல்லாய் இருந்ததென்று கனபேர் சொன்னவை.
இப்ப என்னுடைய கருத்தைத்தானே அறிய விரும்பிக் கேட்டனீங்கள்.
நீங்களும் சில நேரங்களில் மோசமாய்த்தானே பேசுறனீங்கள்!
- கேட்டவர் பாடசாலை ஆ-சிரியர்.

2. உங்களையும் அழைக்கிறன்.
எப்ப எண்டு சொன்னியள்?
வாற சனிக்கிழமை.
வாற சனிக்கிழமை எனக்கு வேறு ஒரு நிகழ்ச்சி இருக்கு. அவர்கள் எப்பவோ சொல்லி வைத்தவர்கள்.
இந்தக் கூட்டத்துக்கு நீங்கள் எப்படியும் வரவேணும்.
நான் என்ன சாயி பாபாவே ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் நிற்க. உதென்ன கதை? நீங்கள் உதுகளையும் நம்புகிறியளே?
- அழைத்தவர் இலங்கைக்குப் போய் வருபவர்.

3. என்ன கண்டும் காணாமற் போறியள்?
இல்லை அவர் அன்றைக்கு இசை நிகழ்ச்சிக்கு வந்தவர். நல்லாய் இருந்ததென்று சொன்னார். கேட்டுக் கொண்டிருந்ததாலை உங்களைக் கவனிக்கேல்ல.
அதாவது, நான் உங்கள் நிகழ்ச்சிக்கு வரேல்ல என்று சொல்லாமற் சொல்லுறியள்.
- பதில் சொன்னவர் பொன்னால் செய்த இலிங்கர்.

4. தேர்த் திருவிழா வருகுது மாஸ்டர்.
தெரியும்.
நீங்கள் வரவேணும். கட்டாயம் வரவேணும்.
என்னென்று வாறது. தூரமெல்லே?
நான் போக்குவரத்து ஒழுங்கு செய்யிறன்.
நல்லது.
- சொன்னபடி செய்யத் தவறியவர் கௌரியின் காதலர்.

5. வணக்கம் சேர்!
என்ன கன காலத்துக்குப் பிறகு?
கன காலமாய் உங்கடை குரலையும் கேட்கேல்ல. பத்திரிகைகளிலும் செய்திகளைக் காணேல்ல. ஒதுங்கி இருக்கிறியள் போல. என்ன சங்கதி என்று அறிய எடுத்தனான்.
- எடுத்தவர் கலைவாணியைக் காற்றினிற் கலப்பவர்.

6. என்ன மாஸ்டர் கைவிட்டிட்டியள்?
கடவுளுக்குப் பிளாஸ்டிக் மாலை போடுறவையளைக் கைவிடாமல் என்ன செய்யிறது?
எங்கை மாஸ்டர், நான் பிளாஸ்டிக் மாலையே பாவிக்கிறதில்லையே? அம்மனுக்குப் போட்டுக் கிடக்கு.
கண்ணாடியைக் கழட்டிப் போட்டுப் பாருங்கோ மாஸ்டர். அது பிளாஸ்டிக் மாலையேயல்ல. ஊரிலிருந்து விசேஷமாய்த் தைப்பித்து எடுப்பித்த துணிமாலை. மணிமாலை, மலர்மாலை போலத் துணிமாலையும் போடலாம் மாஸ்டர். உங்களுக்கு உதுகள் தான் கண்ணிலை படுகுது ஒழிய, இஞ்சை பாருங்கோ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்திருக்கும் விலையுயர்ந்த இந்த மருக்கொழுந்து மாலைகளை எல்லாம் கண்டுகொள்ள மாட்டியள்!
- ஏசியவர் அலங்காரப் பூசை அழகர்.

## நவம்பர்-11...

என்ன பாதிப்புகள் உடலில் ஏற்படப் போகின்றது என்பதனைக் காலந்தான் எமக்குத் தெரியப்படுத்தும். ஜப்பானில் ஹிரோஷமாவில் நடைபெற்ற அணு குண்டுத் தாக்குதலைப் பற்றி அறியாதவர்கள் இல்லை. ஆகஸ்ட் 6ம் திகதி 1945ல் இது ஹிரோஷிமாவின் மேல் போடப்பட்டது. 9 வினாடிகளில் இரண்டு லட்சம் பேர் இறந்தார்கள், 80 ஆயிரம் பேர் காயமடைந்தனர். 10,000 டிகிரி வெப்பம் எழுந்தது, அதாவது பல்லாயிரம் சூரியன்கள் ஒரேநேரத்தில் எரிந்தன, கருவில் இருந்த குழந்தைகள் உருவம் சிதைந்து பிறந்தன, ஆண்கள் ஆண்மையை இழந்தனர், பெய்யும் மழை கூட சாம்பலாகப் பெய்தது. இத்தகைய ஒரு போர்ச் சூழலின் பாதிப்புக்கு ஆளாகிய சிறுமிதான் Sad ako Sasaki. இந் ஞாபகார்த்த தினத்தில் சடாகோவை நினைவு கூருவது சாலப் பொருந்தும். அணுக்குண்டு விழுந்த பிரதேசத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு அப்பாலே இவள் வாழ்ந்து வந்தாள். அப்பொழுது இவளுக்கு இரண்டு வயது. அவளை இக் குண்டின் தாக்கம் பாதிக்கவில்லையெனவே எண்ணினார்கள். ஆனால் இவளது 12வது வயதில் இரத்தப் புற்றுநோய் தோன்றியது. அணுக்குண்டுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகளுக்கு புற்றுநோய் ஏற்பட்டது. யப்பான் நாட்டில் ஒரு நோயாளி 1000 நாரைகளை (Cvanes) கடுதாசியில் செய்தால் அந் நோயிலிருந்து சுகமடையலாம் என்ற நம்பிக்கை உண்டு. யப்பான் நாட்டில் கடுதாசியால் பொருட்கள் செய்யும் கலையாகிய Origami காணப்படுகிறது. சடாகோவும் மிகவும் நம்பிக்கையுடன் தனது சின்னஞ்சிறு கைகளால் இந்த நேர்த்திக் கடனைச் செய்யத் தொடங்குகிறாள். ஆனாலும் 644வது நாரை செய்யும் பொழுது August 25 - 1955ல் இரத்தப் புற்றுநோய்க்கு ஆளாகிறாள். ஆனாலும் அவளின் நண்பர்கள் மிகுதி நாரைகளைச் செய்து 1000 நாரைகளையும் அவளின் பிரேதப் பெட்டியுடன் அடக்கம் செய்தனர். இன்றும் யப்பானில் மாத்திரமன்றி உலகம் முழுவதும் பாடசாலைச் சிறுவர்கள் யுத்தத்தினை நினைவு கூரும் பொழுது கடதாசி நாரைகளைச் செய்கிறார்கள். இங்கும் மாணவர்கள் ஒரிகமி என்னும் கைத்திறன் மூலம் வகுப்பு நேரத்தில் மிகவும் துரிதமாக கடதாசி நாரைகளைச் செய்து வகுப்பறையை அலங்கரிப்பார்கள். இதனைப் பார்க்கும் பொழுது போரின் கொடுமை நினைவுக்கு வந்தபடி இருக்கும். ஹிரோசிமா அமைதிப் பூங்காவில் (Hiroshima Peace Park) சடாகோவின் சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. அதன் அடியில் "எமது அழுகுரல் இதுவே, எமது பிரார்த்தனையும் இதுவே, உலகில் சமாதானம் நிலவட்டும் (This is our cry, this is our prayer, Peace is the World) என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. எமது நாட்டில் எத்தனை சடாகோக்கள் தோன்றப் போகிறார்களோ தெரியவில்லை. உலகில் சமாதானம் நிலவட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ரவரி 3வது திங்கட்கிழமை ஒன்ராறியோ மாகாணத்தில் புதிய விடுமுறை தினம்

ஒன்ராறியோ மாகாணத்தின் வருட விடுமுறை தினங்கள் ஒன்ராறியோவில் மேலும் ஒன்றினால் அதிகரிக்கின்றது. இனிமேல் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை இங்கு விடுமுறை தினமாகும். இதனால் அந்த வார இறுதி நீண்டதாக - மூன்று நாட்களைக் கொண்டதாக இருக்கும். கடந்த மாதம் நடைபெற்ற மாகாணத் தேர்தல் பிரசாரத்தின் போது, லிபரல் கட்சித் தலைவரான டால்ரன் மக்கனரி பல வாக்குறுதிகளை அளித்திருந்தார். தமது கட்சியை மீண்டும் பதவிக்குக் கொண்டு வந்தால், பெப்ரவரி மாதத்தில் ஒரு நாளை விடுமுறை தினமாக்குவதாக ஒரு வாக்குறுதி அமைந்திருந்தது. தேர்தல் வெற்றிக்கு மறுநாளே அவர் புதிய விடுமுறை தினத்தை அறிவித்து அதனை நிறைவேற்றியுள்ளார். மற்றைய விடுமுறை தினங்களுக்கு, வருட முதற் தினம், சிவிக் தினம், கனடிய தினம், கிறிஸ்மஸ் தினம், தொழிலாளர் தினம், 'பொக்சிங்' தினம் என்று பெயர் சூட்டியுள்ளது போன்று, புதிய விடுமுறை தினத்துக்கு 'குடும்ப தினம்' (Family day) என்று முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி பெயரிட்டுள்ளார். முதலாவது குடும்ப விடுமுறை நாளாக அடுத்த பெப்ரவரி மாதம் 18ம் திகதி அமைகின்றது.

## கனடிய மத்திய அரசுக்கு 'பலமான ஆயுள்

கனடிய மத்திய லிபரல் கட்சியின் தலைவர் ஸ்டெபனி டியோனின் பலவீனத்தினால், ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் ஆட்சி பலமடைந்துள்ளது. இதனால், கடந்த வாரம் ஆட்சி கவிழுமென எதிர்பார்க்கப்பட்டது நடைபெறவில்லை. அரசின் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான வாக்கெடுப்பு கடந்த மாதம் நடைபெற்றது. இதன்போது என். டி. பி கட்சியும், புளொக் கியுபெக் கட்சியும் எதிர்த்து வாக்களித்தன. லிபரலும் எதிர்த்து வாக்களித்திருந்தால் ஹாப்பர் அரசு கவிழ்ந்திருக்கும். ஆனால் லிபரல் தலைவர் டியோன் எதிர்த்து வாக்களிக்க மறுத்ததால் லிபரல் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. ஹாப்பர் அரசு 126-79 வாக்கு வித்தியாசத்தில் இதனால் கவிழாது தப்பியது. அண்மைய இடைத் தேர்தல்கள் அனைத்திலும் லிபரல் படுதோல்வி கண்டதால், இப்போது பொதுத் தேர்தல் நடந்தால், அது லிபரலுக்குப் பாதகமாக அமையுமென்று அதன் தலைவர் டியோன் கருதுகின்றார்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை**

தொடர் 11

## 'கர்வ' கார்த்திகை

கார்த்திகை
காலம் அதிகமாய்க் கர்வமுறுகின்ற மாதம்...
காலக் கால்கள் திமிரேறி நடக்கின்ற
நாட்கள்...

காலத்தாய் தன் அற்புதங்கள் சிலவற்றை
கார்த்திகைக்குள்தான்
நிகழ்த்தியிருக்கின்றது.

தமிழுக்கும் கார்த்திகைக்கும் நெருக்கம்
அதிகம்.

தமிழர் வாழ்வுக்கு வளமான பயிருக்கு
வானம் மழையை வழங்குகின்ற மாதம்,

செந்தமிழ்ச் செவ்வேள் குமரன்
கார்த்திகேயன் என
அழைக்கப்படக் காரணமான மாதம்,

ஈழத்தேசியத்தின் இதய மலரான
கார்த்திகைப் பூ
ஆழப் பொருள் சொல்லிப் புன்னகைக்கும்
மாதம்,

காலத்தாயவள் கோலங் கொண்டொரு
கோமகனை
ஈழப்புலத்தில் ஈன்றளித்த மாதம்

போரியல் வாழ்வில் முதல் வித்து
முத்தாய் மண்ணில் விதையுண்ட மாதம்

அர்த்தங்கள் அழகுற, கர்வம் கொள்கிறது
கார்த்திகை.

மலராய்ப் பார்த்தாலும்
மாதமாய்ப் பார்த்தாலும்
இந்தச் சொல்லுக்கு மகத்துவம் அதிகம்.

பூவெனப் பார்த்தால்,

சங்கத் தமிழன் இந்தப் பூவுக்குச்
சூட்டியிருந்த பெயர் காந்தள்
சிவப்பும் மஞ்சளுமாய் மூலவர்ணங்களால்
ஆன பூவின் இதழ்கள்
மெலிதாய் நீண்டு வளர்ந்திருக்கும்.

ஈழத்தின் வயல் வேலிகளிலும், கானகப்
பகுதிகளிலும்
கார்த்திகை அழகாய் இப்பூக்கள்
ஒளியுமிழக் காரணமாகலாம்.

இப் பூவின் வனப்பில், வண்டுகள்
மட்டுமல்ல...
மனித வழிகளும் வீழ்ந்து போயிருக்கின்றன.
நீண்டு மென்மையுற்றிருக்கும் பெண்ணின்
விரல்களைச்
சொல்ல முயன்ற சங்கப் புலவன்
காந்தள் மெல்விரல் என்றே
குறிப்பிட்டிருக்கிறான்.

சீர் பல பெற்ற இப் பூ
ஈழத் தமிழனின் தேசியப் பூ என்பதில்
இப் பூவை விட பெருமை கொள்வது நாமே.

மாதமாய்ப் பார்த்தால்,
வாடி வதங்கி இருக்கும் பயிரெல்லாம்
வானம் பார்க்கையில் வந்திறங்கும்
மழைபோல்,
ஈழத்து இனம் அழிவுற்றுப் போகையில்
தடுத்து நிறுத்திப் பகை அழிக்கவென
மன்னன் வந்துதித்த மாதம்,

காலத்தால் வாழ்வு சிறப்புறுவது இயல்பு
வாழ்வால் காலம் அழகுறுவது அபூர்வம்,

கார்த்திகையை பேரழகு திங்களாய்
பெருமை கொள்ள வைத்திருக்கின்றது
தலைவன் உதிப்பு.

கார்த்திகை ஈழ எதிரிக்கு கலக்கம் தரும்
மாதம்.
எப்போதும் பகைக்கு கார்த்திகையே 'கண்ட
காலம்.'

கிழக்கை இழுத்துவரப் புறப்பட்ட புதல்வர்கள்
அதிகமாய் எழுந்ததும் அதிகமாய்
வீழ்ந்ததும்
இந்த மாதத்தில்தான்.
வீரக் கல்லறை ஒவ்வொன்றும்
கண்ணீரால் கழுவப்படுகின்ற மாதம்
இதுதான்.

ஆண்டில் ஒருமுறை அனைத்து உலகும்
ஓங்கி ஒலிக்கும் தேசியத்தின் குரல் கேட்ட
ஈழத்திசை நோக்கி செவி திருப்பும் காலம்.

கார்த்திகை
காலம் அதிகமாய்க் கர்வமுறுகின்ற மாதம்...
காலக் கால்கள் திமிரேறி நடக்கின்ற
நாட்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

## ஊதித் தள்ளுங்கள்!

நாம் சிகரட்டைக் குடிக்கிறோமா?
அல்லது சிகரட் எம்மைக் குடிக்கிறதா?

புகைப்பவர்கள் எதனை வெளிவிடுகின்றார்கள் என்றால் புகை என்பதே ஏகோபித்த பதிலாகும்!

ஆனால் எம்மை குடிப்பதற்காக சிகரட் எவற்றை வெளியேற்றுகின்றது எனின் பதில் பயங்கரமாய் நீளும்.

Ammonia - மலசலகூட சுத்திகரிப்பில் பயன்படுத்தப்படுவது
Nicotine - கிருமிநாசினி தெளிப்பானில் உள்ளது
Tolene - தொழிற்சாலைகளில் கறை நீக்கும் கரைசலில் உண்டு
Hexamine - இறைச்சி வதக்கும் எரிபொருள் உபகரணத்தில் உண்டு
Stearic Acid - மெழுகுதிரியில் உருகும் மெழுகு
Cadmium - சாதாரண பட்டரிகளில் காணப்படுவது
Butane - சிகரட் லைட்டரில் உள்ள எரிதிரவத்திலிருக்கும் மூலக்கூறு
Acetic Acid - விநாகிரியில் இது நிறையவிருக்கும்
Methane - அட சாக்கடை எங்கும் இதுதானே!
Arsenic - கடும் விஷம். எலிகளுக்கு பாஷாணமாகும்போது
Carbon Monoxide - வாகனங்களின் புகையில் தெரிவது
Methanol - விண்கல எரிபொருளில் உள்ளது போல்
Acetone - வர்ணம் அகற்றப் பாவிக்கும் கலவையில் உள்ளது

இவற்றை ஒன்றாய் திரட்டிப் பத்த வைத்து மகிழும் கொடுமையை கசக்கி வீசுங்கள்.

அணு அணுவாக உயிர் கொல்லும் பயங்கரத்தை உணர்ந்து இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை என்ற அறியாமையைத் தூக்கி எறியுங்கள்.

உறிஞ்சக் கூடியவை (inhalers) உமிழக் கூடியவை (lozenges) மெல்லக் கூடியவை (gum) ஒட்டக் கூடியவை (patches) எனப் பல புகைப்பிடித்தலை நிறுத்தும் வகையில் பாவனையில் உண்டு.

எனினும் அவற்றினும் மேலானதாக உங்களிடமுள்ளது உங்கள் மனது!

புகைத்தலும் புகைச்சலும் இன்றி வாழ்ந்து மறைந்த மாவீரர்களை மனதால் நினைத்தாவது புகைச்சலையும் புகைத்தலையும் ஊதுவதை தள்ளுங்கள்.
தூய காற்று உங்கள் இதயத்தைத் தினமும் முத்தமிடும்.

## செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்களே கவனம்!

மின் இணைப்பினூடாக கைத்தொலைபேசிகளின் பற்றரிகள் மீள்சக்தி ஏற்றப்படும் போது அது சிணுங்கினாலும் (அழைத்தாலும்) ஒருபோதும் பதிலளிக்க முற்படாதீர்கள்.

சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை பாடமாக எடுத்துக் கொள்ளல் அவசியம். ஒருவர் வீட்டில் தனது கைத்தொலைபேசியை மீள்சக்தி ஏற்றுவதற்காக மின் இணைப்பில் இணைத்திருந்தார். அவ்வேளை அழைப்பு வரவும், இணைப்பை துண்டிக்காமல் அப்படியே காதில் வைத்து பேச முற்பட்டுள்ளார். சில கணங்களில், பலத்த சத்தத்துடன் தரையில் தூக்கி வீசப்பட்டுள்ளார். சத்தம் கேட்டு பெற்றோர் அறைக்குள் விரைந்து பார்த்த பொழுது, கைவிரல்களில் எரிகாயங்களுடன், மயக்கமான நிலையில் தரையில் கிடந்துள்ளார்.

மருத்துவமனைக்கு விரைவாக கொண்டு செல்லப்பட்ட போதும், பயனின்றி அங்கு போனவுடன் இறந்துள்ளார்.

கைத்தொலைபேசிகள் மிகவும் உபயோகமான நவீன கண்டுபிடிப்புதான். இருப்பினும், மரணத்தின் உபகரணமாகவும் மாறிவிடும் என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

ஒருபோதும் மின் இணைப்பில் இருக்கும் பொழுது கைத்தொலைபேசிகளை பாவிக்காதீர்!!

(பிற்ஸ்பேர்க் WTAE channel 4 செய்தியிலும் காண்பிக்கப்பட்டது)

தகவல்: ஷியாமளா நவம்

## கைத்தொலைபேசியின் பயன் இலகுப் பயணம்!

பெரிய விமான சேவை நிறுவனங்கள் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளன. விமான நிலையத்தில் boarding pass எனப்படும் உள்நுழைவு அட்டையினைப் பெறுவதற்குப் பதிலாக, பயணிகளது கைத்தொலைபேசிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் ஒரு இலத்திரனியல் கோர்வையைப் (Bar code) பயன்படுத்துவதன் மூலம் அவர்களை விமானத்தில் பயணிக்க அனுமதிக்கவுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோ அரசின் புதிய அமைச்சரவையில் பத்து புது முகங்கள்

டால்ரன் மக்கன்ரியின் ஒன்ராறியோ அரசின் 28 பேரைக் கொண்ட புதிய அமைச்சரவை அக்டோபர் 30ல் பதவியேற்றது. மூத்த அமைச்சர்கள் நால்வரை வெளியேற்றியுள்ள மக்கன்ரி, புதியவர்கள் பத்துப் பேரை அமைச்சராக்கியுள்ளார். ஸ்காபரோ மத்திய தொகுதியில் சாமி அப்பாத்துரையுடனும், ஸ்காபரோ கில்ட்வூட்டில் நீதன் சண்முகராஜாவுடனும் போட்டியிட்டு வெற்றிபெற்ற இரண்டு உறுப்பினர்களும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஜோர்ஜ் சிமிதர்மன், கத்லின் வைன் ஆகியோர் முன்னைய அமைச்சுகளை மீண்டும் பெற்றுள்ளனர்.

## தமிழ் மருத்துவர் சங்க சுகவாழ்வுக் கருத்தரங்கு

கனடிய தமிழ் மருத்துவர் சங்க முழுநாள் சுகவாழ்வு பராமரிப்பு கருத்தரங்கு இந்த மாதம் 17ம் திகதி மிசிசாகாவில் நடைபெறவுள்ளது. டாக்டர்களும் விசேட ஆரோக்கிய நிபுணர்களும் இங்கு உரையாற்றவுள்ளனர். ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் முற்கூட்டியே பதிவு செயய வேண்டும். இதற்கு லஷ்மியுடன் 905 290 3000 அல்லது சாந்தியுடன் 905 273 7946 இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம். சிற்றுண்டியும் இலவச மதிய உணவும் வழங்கப்படும்.

## விடுமுறைக் கொண்டாட்டத்திலும் சேமிக்கலாம்!

விடுமுறைக் காலங்கள் வேகமாக நெருங்கி வருகின்றன. இப்பொழுதே பலர் வீட்டினை பல வர்ண மின்விளக்குகளைக் கொண்டு அலங்கரிக்கத் தொடங்கி விடுவீர்கள். கடினமான வேலையும் கூட. முடிந்தவரை அதை சந்தோஷமாக அனுபவித்தல் வேண்டும் தான். இருப்பினும், படுக்கைக்குச் செல்லும் வேளைகளிலும், பகல் நேரங்களிலும் அவற்றினை அணைத்து விடுவது உங்கள் பனிக்கால மின்சார கட்டணத்தினை சேமிக்க உதவும். விலைகுறைந்த, நேரத்தினை தேவையானளவு ஒழுங்குபடுத்தக் கூடிய ஒரு மின் ஆளியை அல்லது அதைவிடச் சிறந்ததாக ஒளியின் மூலம் தானாக இயங்கக் கூடிய ஆளியை பாவிப்பதானது உங்கள் பணத்தினை மிச்சப்படுத்த உதவுவதுடன் தேவையற்ற நேரத்தில் உபயோகப்படுத்துவதினால் வெளியேற்றப்படும் கரியமில வாயுவினையும் சுற்றாடலில் குறைக்கலாம்.



குயின்ரஸ் துரைசிங்கம்

17

**கணினிப் பக்கம்**

# காக்க காக்க கணினி காக்க...

WWW என்ற எழுத்துக்களுக்கும், மின்னஞ்சல் முகவரிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதாவது, WWW என்ற எழுத்துக்களை, மின்னஞ்சல் முகவரியுடன் பாவிக்கும் அவசியம் இல்லை. இன்னும் சொல்லப் போனால், மின்னஞ்சல் முகவரியைக் கொடுக்கும் போது, www என்ற எழுத்துக்களையும் நீங்கள் சேர்த்துக் கொடுக்க முயற்சித்தால், கணினி உலகத்தில் நான் ஒரு கத்துக்குட்டி, அதிகம் தெரியாதவன் என்று என்னை நானே காட்டிக் கொடுத்து விடுவதாக அமைந்து விடும். www என்ற எழுத்துக்கள், இணையத்தள முகவரிகளுக்கு மட்டுமே பாவிக்கப்படுகின்றன. அவற்றைப் பாவிக்காத இணையத்தள முகவரிகளும் உண்டு. ஆனால் அதைப்பற்றி வேறு பகுதியிலே பார்க்கலாம்.

இலவச மின்னஞ்சல் சேவை வழங்கும் இந்த நிறுவனங்கள் பெயர், மின்னஞ்சலின் பின்பகுதியில் காணப்படும். மெயில்.கொம் சேவையில் மட்டும், இந்த பின்பகுதியை, எமது தேவை கருதி, அவர்களது நீண்ட பட்டியலிலிருந்து ஒன்றைத் தெரிவு செய்ய வாய்ப்புக் கிட்டுகிறது. உதாரணமாக, பல் வைத்திய நிலையமொன்றை எடுத்துக் கொள்வோம். பரமகுருநாதன் ஒரு பல் வைத்தியராக இருந்தால், அவரது மின்னஞ்சல் முகவரியின் பின்பகுதியை, டென்ரிஸ்ட்.கொம் (dentist.com) என்று எடுத்துக் கொள்வதற்கு மெயில்.கொம் வாய்ப்பு வழங்குகிறது. paramagurunathan@dentist.com என்று அவரது முகவரி அமைவது, அவரது தொழிலை நேரடியாகப் பிரதிபலிப்பதால், அதை விரும்புபவர்கள், மெயில்.கொம் சேவையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

சொந்தத் தொழில் செய்பவர்கள் உட்பட, தங்கள் தேவை கருதியதாக மின்னஞ்சல் முகவரியை உருவாக்க விரும்பும் அனைவருக்கும், மெயில்.கொம் (www.mail.com) ஒரு அரிய வாய்ப்பாக இருக்கிறது.

மேலே நாம் பார்த்த ஏதாவது ஒரு இணையத்தள முகவரிக்கு சென்று, அங்கே புதிய மின்னஞ்சல் பெறுவதற்கான இணைப்பை (link) அழுத்தினால், அடுத்த கட்டமாக உங்களது சில அடிப்படை விபரங்களை நிரப்பும்படி கோரப்படும். சொந்த விபரங்களை இங்கே கொடுப்பதால் பின்னர் சிக்கல் ஏதும் வந்து, மூத்த மகன் சத்தம் போடுவானே என்றோ, மருமோள் போர் தொடுப்பாள் என்றோ கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இங்கே ஒரு குட்டி ரகசியம் சொல்லி வைக்கிறேன். வேறு யாருக்கும் சொல்லாதீர்கள்.

சொந்தமாக தங்களுக்கென இலவச மின்னஞ்சல்களை உருவாக்கும் மிக அதிகமானவர்கள், தங்களது உண்மையான விபரங்களைக் கொடுப்பதில்லை. பரமகுருநாதன் ஒரு விரிவுரையாளராக மாறலாம். பரமலிங்கம் ஒரு வாழைப்பழக்கடை உரிமையாளராக உருவெடுக்கலாம். இலவச மின்னஞ்சல் சேவையை வழங்கும் நிறுவனங்களும் இதைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. ஆக, நீங்கள் விரும்பிய ஆண்டில் பிறந்து விரும்பிய பெயரில் உலா வருவதற்கும் இந்த இணையத் தளத்தில் வசதி இருக்கிறது.

மின்னஞ்சல் உருவாக்குவதற்குத் தேவையான விபரங்களைக் கோருகின்ற அந்தப் பத்திரத்தில், சில விபரங்களை சுருக்கமாகக் கொடுத்துக் கொண்டு, அடுத்த கட்டத்திற்குச் செல்லலாம். பிறந்த திகதி உட்பட, உங்களது பெயர் முகவரி தொழில் பொழுதுபோக்குகள் என்று அத்தனைக்கும் புதுமைப்பித்தனிடம் கற்பனையைத் தற்காலிகமாகக் கடன் வாங்கிக் கொண்டு, ஒரு புதிய மின்னஞ்சல் முகவரியைத் தயாரித்து விடுங்கள். உங்கள் பெயரில் ஏற்கனவே யாராவது ஒருவர், தான்சானியாவில் ஒரு முகவரியைப் பெற்றிருப்பார். கவலை வேண்டாம். முன்னே அல்லது பின்னே அல்லது இடையில் ஓரிரு இலக்கங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். paramagurunathan123 என்று பாவிக்கலாம். pguru1000 என்றும் பாவிக்கலாம். param1_dentist என்றும் பாவிக்கலாம். தேவை மற்றும் விருப்பம் தழுவியதாக உங்கள் முகவரியை அமைத்துக் கொள்ளுங்கள். கடவுச்சொல் (password) ஒன்று தேவை. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடியதாகவும், அவசியம் ஏற்படும் போது கடவுச்சொல் என்ன என்பதை கௌரவமாக வெளிப்படுத்தக் கூடியதாகவும் அந்தச் சொல்லை அல்லது இலக்கங்களைத் தெரிவு செய்யுங்கள். கௌரவமான சொல்லைத் தெரிவு செய்யும்படி கூறுவதற்கு எனது சொந்த அனுபவம் தான் காரணம். ஒருமுறை எனது மைத்துனர் வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கே வந்திருந்த நண்பர் ஒருவர், தனது மின்னஞ்சல் சேவையைப் பாவிக்க முடியாதிருப்பதாகக் கூறினார். அதை இலகுவாகச் சரிசெய்து விடலாமே என்று துள்ளியெழுந்த நான், கணினியில் நுழைந்து, மின்னஞ்சல் சேவையின் தளத்திற்கு சென்று, அவரது முகவரியை வழங்கி....,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.

# இது எப்பிடி இருக்கு?

## பெண்ணின் வயிற்றுக்குள் குட்டிப் பாம்பு

அமெரிக்க மாநிலமொன்றில் அண்மையில் நடந்தது. நடுத்தர வயதுப் பெண்ணொருவர் பல வருடங்களாக வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்தார்.

நோயைக் கண்டுபிடிக்க முடியாத வைத்தியசாலை நிர்வாகம் இறுதியில் சத்திர சிகிச்சை முடிவுக்கு வந்தது.

வயிற்றைக் கீறி உறுப்புகளை வெட்டிய டாக்டர்கள் அதிர்ச்சியடைந்தனர். குட்டிப் பாம்பொன்று (சுமார் 15 சென்டிமீட்டர் நீளம்) சீறிக்கொண்டு வெளியே வந்தது. தாதிகள் பயப்பீதியால் பாய்ந்தடித்து ஓடினர்.

'சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் அந்தப் பெண் குளமொன்றில் குளிக்கையில் குடித்த நீருடன் சின்னஞ்சிறு பாம்பு முட்டையை விழுங்கிவிட, அது உள்ளே சென்று பொரித்து குட்டியாகி, இவர் உண்ட உணவுகளிலேயே தானும் பங்குபோட்டு உயிருடன் இருந்துள்ளது' என்கிறார்கள் டாக்டர்கள்.

## ஆணின் நாக்கினுள் கரப்பொத்தான் பூச்சி!

இந்தோனேஷியாவில் ஒரு ஆணின் நாக்குக்கு உள்ளே கரப்பொத்தான் பூச்சி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. டாக்டர்கள் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை செய்து, (நாக்கைப் பிளந்து) அதனை வெளியே எடுத்து விட்டனர்.

கடித உறையொன்றினை (என்வலப்) ஒட்டுவதற்குத் தனது எச்சிலை இவர் பயன்படுத்தியதே இதற்குக் காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடித உறைகளை இலகுவாக ஒட்டுவதற்காக ஒரு வகை பிசின் அதில் பரப்பப்படுவது வழக்கம் அது நல்ல வாசனையாக இருக்கும். இதில் நாக்கைத் தடவி எச்சிலைப் பூசினால், உறை ஒட்டப்பட்டுவிடும்.

சிறு கடையொன்றில் என்வலப் பெட்டியைத் திறந்தவாறு வைத்திருந்துள்ளனர். அதில் கரப்பொத்தான் புகுந்து வாசனைப் பசையை சுவைத்துவிட்டு, அதன் மேலே தனது முட்டையை இட்டுச் சென்றுள்ளது.

இது எதனையும் அறியாத நுகர்வாளர் ஒருவர், என்வலப் ஒன்றினைப் பெற்று. வழக்கம் போல எச்சிலால் நாக்கில் இழுத்துத் தடவ....

கரப்பொத்ததான் முட்டை நாக்கினுள் சென்று, குஞ்சு பொரித்து, வளர்ந்து விளையாடியுள்ளது.

## உள(!)வுத் தொழிலுக்கு வந்தனம் செய்வோம்?

எங்கும் உளவாளிகள்; எதிலும் உளவாளிகள். அருகிலுருப்பவன் நண்பனா, உளவாளியா என்று தெரியவில்லை.

"ஆண்டவரே! எதிரியிடமிருந்து என்னைக் காப்பாற்ற என்னால் முடியும். நண்பனிடமிருந்து என்னைக் காப்பாற்ற உதவ வேண்டும்" என்று கேட்கும் நிலை பலருக்கு இன்று.

பெற்ற தாயைக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனத்தைச் 'சில்லறை'களைப் பெறுவதற்காகவும், எலும்புத் துண்டுகளுக்காகவும் இவர்கள் செய்வதாக பாதிக்கப்பட்ட அன்பர் ஒருவர் வேதனையுடன் சொன்னார்.

'உழவுத் (வேளாண்மை) தொழிலுக்கு வந்தனம் செய்வோம்' என்று எமது மூத்தோர்கள் கூறிச் சென்றதைச் சிலர் 'உளவு' (spy) என்று தப்பாகப் புரிந்து விட்டார்கள் போல இருக்கின்றது என்று கற்றுணர்ந்த பிரமுகர் ஒருவர் நமட்டுப் புன்னகையுடன் கூறினார்.

தமிழர்கள் புகலிடம் பெற்றுள்ள நாடுகள் எங்கும் இந்த உளவாளிகள் பல்கிப் பெருகி ஊடுருவியிருப்பதாகவும், சிலர் ஊடகர்களாக நடமாடுவதாகவும் அனுபவஸ்தர்கள் சொல்கின்றனர்.

**உதாசனன் உலா விருந்து**

## நவராத்திரிக் கொலுவிலும் இராமர் பாலம்

இந்தியாவில் பாரிய அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இராமர் பாலம், சமூக சமய வாழ்க்கையிலும் இப்போது பிரதிபலிக்க ஆரம்பித்துள்ளது.

இவ்வருட நவராத்திரி காலத்துக் கொலுவிலும் இராமர் பாலம் முக்கிய இடம் பெற்றது என்றால் பாருங்களேன்!

சென்னையிலுள்ள பல வீடுகளில் வானரங்கள் கற்களைத் தூக்கிக் கொண்டு செல்வது போலவும், இலங்கையில் சீதா பிராட்டியார் காத்திருப்பது போலவும், சமுத்திரத்தினுள் இராமர் பாலம் உள்ளதைக் காட்டும் செய்மதிப் படமும் கொலுக்களில் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஆண்டில் சில வீடுகளில் முதலமைச்சர் கருணாநிதி வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது போன்ற கொலுக்கள் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புத்தருக்கு மொத்தம் எத்தனை பற்கள்?

சிங்கப்பூரிலுள்ள சினாட்டி என்ற இடத்திலுள்ள புத்தர் கோவிலில் அவரது பல் ஒன்று பல வருடங்களாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இது புத்தரின் பல்தானா என்ற சந்தேகத்தைச் சில பல் வைத்திய நிபுணர்கள் நீண்ட பரிசோதனையின் பின்னர் அண்மையில் கிளப்பியுள்ளனர்.

புத்தர் ஒரு மனிதப் பிறவி. இவருக்கு முப்பத்திரண்டு பற்களே இருந்திருக்க வேண்டும். ஆனல், நூறுக்கும் அதிகமான பௌத்த வழிபாட்டுத் தலங்களில் இவரது பற்கள் இருக்கின்றன. நம்ப முடிகின்றதா?


சில மாதங்களுக்கு முன்னர் நேபாள பௌத்த நிறுவனமொன்று புத்தரின் மயிர் என்று சொல்லி ஒரு தலை மயிரை வெள்ளிப் பெட்டியில் வைத்து சிறீலங்கா அரசுக்கு அன்பளிப்புச் செய்தது.


முதலில் பல், இப்போது மயிர்! அடுத்தது என்ன....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புக் கரும்புலிகளுக்கு கனடியத் தமிழரின் வீரவணக்கம்



## அனுரதபுரத்தில் முதலாவது மாவீரர் துயிலும் இல்லத்தை மகிந்த அரசே அமைத்துள்ளது!












கடந்த மாதம் 22 திகதி அதிகாலை அனுரதபுரம் வான்படைத் தளத் தாக்குலை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு ஆகுதியாகிய 21 சிறப்புக் கரும்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி கனடியத் தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதத்துக் கடைசி ஞாயிறன்று (அக்டோபர் 28), எற்றோபிக்கோ சங்கீத் மண்டபத்தில் நடைபெற்றது. மலரஞ்சலி, தமிழ்த் தேசியக் கொடி ஏற்றல் ஆகியவைகளையடுத்து உரை மற்றும் கவிதை வடிவங்களில் வீர வணக்கம் செலுத்தப்பட்டது. இலங்கை நாடாளுமன்ற தமிழர் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் திரு. மா. க. ஈழவேந்தன், தமிழர் தகவல் முதன்மை ஆசிரியரும் அரசியல் ஆய்வாளருமான திரு எஸ். திருச்செல்வம், அரசியல் ஆய்வாளர் நேரு குணரத்தினம், முழக்கம் ஆசிரியர் திரு, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன எஸ். கிருஷ்ணலிங்கம், ஈழநாடு பரமேஸ்வரன் ஆகியோர் இங்கு உரையாற்றினர். வல்வை சகாரா, வனிதா இராஜேந்திரம், வனிதா அன்ரன், பசுபதி ஏகலைவன், சுந்தரேஸ்வரன் ஆகியோர் உணர்வுபூர்வமாகக் கவிதாஞ்சலி செலுத்தினர். திரு. விஷ்ணு சுந்தரம் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். திரு. ஈழவேந்தன் தமதுரையில், ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அங்கத்துவ நாடாக தமிழீழம் இடம்பெறும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று கூறினார். திரு. திருச்செல்வம் உரையாற்றுகையில், 21 கரும்புலிகளின் திருமேனிகளை அனுரதபுரத்தில் அடக்கம் செய்ததன் ஊடாக அங்கு முதலாவது மாவீரர் துயிலும் இல்லத்தை மகிந்தா அரசே உருவாக்கியுள்ளது என்றும், இதன் மூலம் எல்லாளன் இராசதானி அமைந்திருந்த அந்த மண் தமிழ் மண் என்பதை நவீன துட்டகைமுனுவான மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் சொன்னார். நேரு குணரத்தினம் பேசுகையில், “21 சிறப்புக் கரும்புலிகளும் தங்கள் கடமையைச் செய்து முடித்துள்ளனர். புகலிடத் தமிழர்கள் தங்கள் கடமையை உரிமையுடன் செய்து முடிக்கக் காலம் வந்துவிட்டது” என்று குறிப்பிட்டார். இந்த வணக்க நிகழ்வு 36 மணித்தயால முன்னறிவிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டதாயினும், மண்டபம் நிரம்பி வழியும் வகையில் தமிழ் உணர்வாளர்கள் திரண்டு குவிந்திருந்தனர். பெருமளவில் பெண்களும் பிள்ளைகளும் பங்கேற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# கலப்பு அங்கத்துவ விகிதாசார பிரதிநிதித்துவ கருத்துக் கோடல் (Referendum) ஏன் தோற்றது?

இக் கருத்துக் கோடல் (இதுவே சரியான மொழிபெயர்ப்பு என்கிறார் வல்லுனர் மணி வேலுப்பிள்ளை, சரி போலத் தெரிகிறது. கருத்துக் கணிப்பு என்பதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பு Plebicite என்பார்கள்). ஆரம்பத்திலிருந்தே இந்த முயற்சி தோல்வியுறும் என்பது யாவரும் அறிந்ததே ஆனால் இப்படிப் படுமோசமாகத் தோல்வி யுறும் என நான் எதிர்பார்க்கவில்லை. நடைெ-பற்ற கருத்துக்கோடலில், கலப்பு அங்கத்துவ விகிதாசாரத் தேர்தல் முறையினுக்கு ஆதரவாக வாக்களித்தோர் - 16 இலட்சம்.

தற்போதைய தேர்தல் முறையே தொடர்ந்து இருக்கட்டும் என வாக்களித்தோர் தொகை - 27 இலட்சம்.

இந்தத் தேர்தல் சீரமைப்பினை மக்கள் ஏன நிராகரித்தனர். சிந்தித்தேன். மக்களுக்கு கட்சி அரசியலில் நம்பிக்கை குறைந்து போயுள்ளது: எது நடந்தாலும் நடக்கட்டும். எமது தற்போதைய பொருளாதார சமூக நிலையில் தேர்தலில் வாக்களிப்பதால் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்ற மெத்தனம், இதற்கான முதற்காரணமாக அமையலாம். இம்முறை தேர்தலில் வாக்களித்தோர் தொகை சரித்திரம் காணாத அளவினுக்கு மிகவும் குறைவு. வெறும் 58.8% மக்கள் தான் தேர்தலில் பங்குபற்றியுள் ளார்கள். இதனிலும் பார்க்கக் குறைவான தொகையினர் ஒன்ராறியோ மாநிலத் தேர்தலில் என்றுமே வாக்களித்ததில்லை. இதற்கு அடுத்ததாக குறைந்த வீதத்தினர் வாக்களித்தது 1923ம் ஆண்டிலேயே. அப்போ வாக்களித்தோர் வீதம் 54.7 ஆகும். தேர்தலிலும், அதன் முடிவினால் அரசாங்கம் அமைப்பதிலும் மக்கள் நம்பிக்கையைப் பெரிதும் இழந்து விட்டார்கள். மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம் என்பது பித்தலாட்டம் என்பது மக்களது அசைக்க முடியாத நம்பிக்கையாகிவிட்டது. நடந்த தேர்தலிலே மாநகரப் பெரும் பாகத்திலே உள்ள 9 தொகுதிகளை சிறுபான்மையினர் தொகுதிகளாக கருதியுள்ளார்கள். அவை ஒவ்வொன்றிலேயும் வாக்களித்தோர் விகிதம் மாகாண சராசரியிலும் பார்க்கக் குறைவாக இருப்பது ஆச்சரியமாக உள்ளது. மார்க்கம் யூனியன்வில் - 40.5%, ஸ்காபரோ - றூச்றிவர் - 40.9%, யோர்க் மேற்கு - 41.7%, மிசிசாகுவா - பிரம்ரன் தெற்கு - 42.1%, பிரம்ரன் - ஸ்பிறிங்டேல் - 43.3%, பிறாம்லியா - கோறே - மால்ரன் - 43.8%, பிரம்ரன் மேற்கு - 44.4%, எற்றோபிக்கோ வடக்கு - 44.5%, ஸ்காபரோ - ஏஜின்கோர்ட் - 45.5%.

ஆக ஏனையவரிலும் பார்க்கப் புலம்பெயர்ந்தோருக்கே தான் இங்கு ஜனநாயகத்தில் பெரிதும் நம்பிக்கை அற்றுவிட்டது என்பது தெள்ளத் தெளிவு. மேற்படி தொகுதிகளிலே வாழ்கின்ற வாக்காளர்கள் தேர்தல் தமக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்கப் போவதில்லை என அசையாத நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தால் 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' என்ற மனப்பான்மையுடன் தேர்தலில் வாக்களிப்பதை முற்றாகவே நிராகரித்தமையால் ஒப்புக்கோடல் பக்கமே சிந்திக்கத் தவறி விட்டனர். தமது தமைமைச் சான்றிதழ்களை அங்கீகரிப்பதில்லை, வேலை தேடிப் போனால் கனடிய அனுபவம் உள்ளதா என்ற கேள்வி, தங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே பார்க்கின்றனர் என்ற ஆதங்கம் போன்று அவர்கள் அடுக்கிக் கொண்டே போகின்ற குறைகளின் பட்டியல் அவர்கள் விரக்தியின் விளைவாக எடுத்த தீர்மானத்தினை முற்றாகக் குறை சொல்வதும் சாத்தியம் இல்லை என்றே எண்ண வைக்கின்றது.

அரசியல் கட்சிகளின் மெத்தனம்: தேர்தல் முறையில் மாற்றம் செய்வது பற்றி முதலிலிருந்தே ஆளும் கட்சியோ அல்லது பிரதான எதிர்க் கட்சியான புதிய கொன்சர்வேற்றிவ் கட்சியோ பெரிதாக ஆர்வம் காட்டியவர்கள் அல்ல. இன்னும் சொல்வதாயிருந்தால் புதிய கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைவர் ஜோன் ரோறி அவர்கள் இதனை எதிர்த்து வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆளும் கட்சியைப் பொறுத்தமட்டிலே இந்தத் தேர்தல் முறையில் சீரமைப்பு என்பது வெறும் கண்துடைப்பேயன்றி வேறல்ல. ஏதோ மாற்றம் தேவையென்போரினது வாயினை அடைப்பதற்காக ஒன்ராறியோ குடிமக்கள் பேரவை (Ontario Citizens Assembly) ஒன்றினை அமைத்து அவர்கள் சிபார்சினை ஒப்புக் கோடலுக்கு விடுவதாக ஒரு நாடகம் நடத்தினார் மக்குவின்ரி. இதே போன்ற முயற்சி பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்திலே இரண்டு முறை ஒப்புக் கோடலுக்கு விடப்பட்டு தோல்வி கண்டது என்பதை மக்குவின்ரி நன்கு அறிவார். எனவே அவர்களையே பின்பற்றி சீரமைப்பினை நடைமுறைப்படுத்துவதாயின் இரண்டு நிபந்தனைகள் எனும் முட்டுக் கட்டைகளைப் போட்டார்.

ஒன்று: தேர்தலின் போது மாகாணம் முழுவதும் இடப்பட்ட வாக்குகளில் குறைந்தது 50% இனராவது தேர்தல் சீரமைப்பிற்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டும்.
இரண்டாவது: குறைந்தது 60% தொகுதிகளிலாவது, அதாவது ஒன்ராறியோ மாநிலத்தின் 64 தொகுதிகளிலாவது 60%இற்கு மேலானோர் இதற்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டும்.

என்ன நடந்தது? தேர்தல் சீரமைப்பிற்கு ஆதரவானோர் அளித்த வாக்குகள் - 16 இலட்சம். இப்போதைய தேர்தல் முறையே தொடரட்டும் என வாக்களித்தோர் தொகை 27 இலட்சம். மொத்தமாக வாக்களித்தோர் 43 இலட்சம். ஆகவே தேர்தல் சீரமைப்பிற்காக ஆதரவாக வாக்களித்தோர் வெறும் 37% இனரே. இதன் நிமித்தமே இந்தச் சீரமைப்பினைப் பார்த்தால் இன்னும் பரிதாபமாக உள்ளது. தேர்தல் சீரமைப்பிற்குச் சாதகமாக 60% மேலாக வாக்களித்த தொகுதிகள் வெறும் ஐந்தே ஐந்து மாத்திரமே. ஐந்து எங்கே? அறுபத்திநாலு எங்கே? 60%இற்கு மேலாக ஆதரவு காட்டிய தொகுதிகள் 1. பார்க்டேல் - ஹைபார்க் (NDP) 2. திரினிற்றி - ஸ்படைனா (NDP) 3. ரொறன்ரோ - டன்போர்த் (NDP) 4. பீச்சஸ் - கிழக்கு யோர்க் (NDP) 5. டேவன்போர்ட் (லிபரல்) ஏனைய 83 தொகுதிகளில் 60% முதல் 80% இனர் தற்போதைய தேர்தல் முறை தொடர்ந்து இருக்கட்டும் என வாக்களித்துள்ளனர். 19 தொகுதிகளில் 50% முதல் 60% வரையினர் தற்போதைய முறையினுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இதில் பீச்சஸ் - கிழக்கு யோர்க்கிற்கும், பார்க்டேல் - ஹைபார்க்கிற்கும், ரொறன்ரோ - டன்போர்த்திற்கும், திரினிற்றி - ஸ்படைனாவிற்கும் முறையே NDP யினைச் சேர்ந்த மைக்கோல் புறூவும், செறி டைநோவாவும், பீற்றர் ரப்னசும், மர்ச்சேஸ்சும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

டவன்போர்ட்டில் லிபரல் ரொனி றூப்பிறிக்கட் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் மிக நெருக்கமாக இரண்டாவது இடத்தில் NDP கட்சியினைச் சேர்ந்த பீற்றர் ஃபெரேய்ராவே உள்ளார். ஆகவே NDP ஆதிக்கம் உள்ள தொகுதிகளிலேதான் தேர்தல் சீரமைப்பிற்கான ஆதரவு 60% இற்கு மேலாக இருந்துள்ளதைக் காண முடிகிறது. இத் தொகுதிகள் யாவும் ரொறன்ரோ மாநகரத்தினைச் சார்ந்த தொகுதிகளே. மாநகரத்துக்கு வெளியே NDP வெற்றி பெற்ற தொகுதிகளில் கூட தேர்தல் சீரமைப்பிற்கு ஆதரவு இருக்கவில்லை.

இங்கே கூட NDP வெற்றி பெற்ற ஏனைய ஐந்து தொகுதிகளில் கட்சித் தலைவர் ஹாவார்ட் ஹம்ரன் (கேனோறா - றெயி றிவர்) மற்றும் பிரபல தலைவர் பீற்றர் கோர்மோஸ் (வெல்லாண்ட்) வெற்றி பெற்ற தொகுதிகள் உட்பட 60% வாக்குக் கிடைக்கவில்லை என்பது வருத்தத்துக்குரியதே. விகிதாசார தேர்தல் முறை பற்றி போதியளவு மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை: மேற்படி தொகுதிகளில் 60% இற்கு மேலானோர் இப்போதைய தேர்தல் முறையே தொடர வேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆகவே இத்தலைவர்கள், தேர்தலில் வெற்றி பெறும

(28ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிவிஜ தொலைக்காட்சிச் சேவையின் நிறைவேற்றுத் தயாரிப்பாளர் விக்னேஸ்வரனுக்கு 'அகேனம்' விருது



கனடாவின் ரிவிஜ தொலைக்காட்சிச் சேவையின் நிறைவேற்றுத் தயாரிப்பாளரும் (Executive Producer) மூத்த ஊடகவியலாளருமான திரு. பி. விக்னேஸ்வரனுக்கு கடந்த மாதம் ஸ்காபரோவில் இடம்பெற்ற கனடிய தமிழ்க் குறுந்திரைப்பட விழாவின்போது அவரது நீண்டகால ஊடக-கலைத்துறைப் பணிக்காக 'அனேகம்' விருது வழங்கப்பட்டது.

1970களில் இலங்கை வானொலியில் (பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) சேவையாற்றத் தொடங்கிய 'விக்கி', தமிழ்நாடகப் பிரிவின் பொறுப்பாளராகவும் தயாரிப்பாளராகவும் பணியாற்றியதுடன் சிறந்த செய்தி வாசிப்பாளர்களில் ஒருவராகவும் துலங்கினார். இலங்கை வானொலியில் பலநூறு நாடகங்களைத் தயாரித்து வழங்கியதுடன், நூற்றுக்கணக்கான ஆர்வலர்களை இத்துறைக்கு அறிமுகப்படுத்தி, சிறந்த நடிகர்களாகத் திகழ வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

இலங்கையில் 1982ல் தொலைக்காட்சிச் சேவை (ரூபவாஹினி) ஆரம்பமானபோது மூத்த நிகழ்ச்சித் தயாரிப்பாளராக நியமனமாகி, சில வருடங்களில் அதன் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகப் பதவியேற்றார். நவீன நாடகத்துறையில் நிரம்பிய அனுபவம் பெற்ற இவர், தொலைக்காட்சிக்கென சிறப்பு நாடகங்களையும், தொடர் நாடகங்களையும் தயாரித்து நெறியாள்கை செய்து முத்திரை பதித்தவர்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் காரணமாக 1990களின் ஆரம்பத்தில் கனடாவில் குடியேறிய திரு. விக்னேஸ்வரன், தமது சகோதரர் பி. ஞானேஸ்வரனால் நடத்தப்பட்ட 'தேமதுரம்' வானொலிச் சேவையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். இங்கும் பல நாடகங்களை அவர் நெறியாள்கை செய்து மேடையேற்றியது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் குழந்தை சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்', வி. சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்', யுஜின் லோன்ஸின் 'நாற்காலிகள்' முக்கியமானவை.

தமிழர் தகவலின் ஆண்டு மலர்களில் வானொலிச் சேவை மற்றும் தொலைக்காட்சிச் சேவை தொடர்பான கட்டுரைகளை எழுதி வருவதால் திரு. விக்னேஸ்வரன் தகவல் வாசகர்ளிடையே நன்கு அறிமுகமானவர். ஸ்காபரோ சிவிக் சென்டரில் நடைபெற்ற தமிழ்க் குறுந்திரைப்பட விழாவில் அதன் அமைப்பாளர்களில் ஒருவரான திரு. தாம் சிவதாசன் 'அகேனம்' விருதினை திரு. விக்னேஸ்வரனுக்கு வழங்குவதை ஒளிப்படத்தில் காணலாம்.

# ஈழத்தமிழரின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் கனடிய அரசியலாளர்களுடன் சந்திப்பு



கனடாவுக்கு மூன்று மாத விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கை தமிழர் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மா. க ஈழவேந்தன், கனடாவின் பல மட்ட, பல கட்சிப் பிரமுகர்களையும் தொடர்ச்சியாகச் சந்தத்து வருகின்றார். இலங்கையில் தமிழ் னக்கள் அனுபவித்து வரும் இன்னல்களையும், தொடர்ச்சியாக சிங்கள அரசுகளால் அவர்களால் ஏமாற்றப்படுவதையும் மிகப் பக்குவமாக அவர் எடுத்துரைத்து வருகின்றார். இவரதி சந்திப்புத் தொடரில் தமிழர் நலனில் அக்கறை கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர் இந்த மாத இறுதி வரை இங்கு தங்கியிருக்கும் வேளையில் மேலும் பல முக்கிய சந்திப்புகளை நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

கனடிய வெளியுறவு அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளர் டீபக் ஒப்ஃராயை (Deepak Obhrai) அண்மையில் திரு. ஈழவேந்தன் சந்தித்து உரையாடினார்.


உரையாடலின் போது விடுதலைப் புலிகளை சென்ற ஆண்டு கனடா அரசு தடை செய்தது வருந்தத் தக்கது என்று குறிப்பிட்ட ஈழவேந்தன் அவர்கள் புலிகளைத் தடை செய்தது ஈழத் தமிழ் இனத்தைப் பலவீனப்படுத்தியுள்ளதென்றும் கூறினார். அத்தோடு தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி எடுக்கப்படும் முடிவுகள் சட்டத்தின்படி செல்லுபடியாகாது. எனவே புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைப்பதற்கு முன் அவர்கள் மீது விதித்த தடையை நீக்குவது அவசியம் என்று ஈழவேந்தன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் கனடாவில் இயங்கும் இணைப்பாட்சிக் கோட்பாடு - தத்துவம் பல்இனம், பல்மொழி, பல்சமயம் கொண்ட நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்பு என்று குறிப்பிட்டதோடு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சிறிலங்கா அரசை வற்புறுத்துவது கனடா அரசின் கடமை என்று குறிப்பிட்ட ஈழவேந்தன் அவர்கள் சிறிலங்கா அரசு கனடா அரசின் அரசியல் தாக்கத்தை தார்மீகத் தாக்கத்தை ஏற்க மறுப்பின் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து நடைமுறையில் இருக்கும் தமிழர் ஆட்சிக்கு சட்டவலு கொடுக்க வேண்டும் "What is defects should be define should be give device recognition" என்று ஈழவேந்தன் குறிப்பிட்ட போது வெளியுறவு துணை அமைச்சர் Deepak Obhrai புன்முறுவல் பூத்தார். புன்முறுவலின் பொருளை காலம்தான் உணர்த்த முடியும் என்று ஈழவேந்தனும் புன்முறுவலுடன் கூறினார். கனடாவிலுள்ள பல்வேறு தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும், தொழிற்துறை நிபுணர்களையும், இளைஞர்-மாணவர் அமைப்புகளின் முக்கியஸ்தர்களையும் திரு. ஈழவேந்தன் எம். பி. சந்தித்து உரையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் பதிவு

# கனடாவில் தடம் பதித்தது நியூசிலாந்து





நியூசிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் எனும் ஆய்வுநூல் கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் 06-10-2007 இல் கனடா பிரசுரமாக வெளியிடப்பட்டது. நியூசிலாந்தில் வசிக்கும் ஈழத்தமிழரான வித்துவான் ஆ.தா. ஆறுமுகம் அவர்கள் சிறந்த வரலாற்றுப் பதிவு ஆவணமாக இந் நூலை எழுதியிருந்தார். நொடிகள் என்ற அவரது சிறு தொகுப்பு நூலும் மறுபிரசுரம் செய்யப்பட்டிருந்தது. கனடிய கலை இலக்கிய ஊடக நண்பர்கள் சார்பாக இவ்விழாவினை ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள். குறித்த நேரத்தில் மங்கல விளக்கினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர் ஆ.தா. ஆறுமுகம் தம்பதியர். செல்வி சஹானா கோபி மனோகரன் தேவாரப் பண் பாடிய பின்னர் செல்வன் கணதீபன் ரமேஷ்ம் செல்வி பிரியதர்சினி ரமேஷ்ம் கனடிய தேசிய கீதமிசைத்தனர். தொடர்ந்து - உயிர் நீத்த உத்தமர்களுக்கு சபையோர் எழுந்து நின்று மௌனமாக அஞ்சலித்தனர். சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்களும் திரு. தி. விஸ்வலிங்கம் அவர்களும் ஆசியுரை வழங்கினர். வாழ்த்துரையை திரு. நா. சிவலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். திரு. எஸ். ஜெகதீசன் அவர்கள் வரவேற்புரையையும் நூலாசிரியர் அறிமுகவுரையையும் சிறப்புடன் கவனித்தார். திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் தலைமையுரையை காத்திரமாகச் செய்திருந்தார். பிரபல எழுத்தாளர் திரு.க. நவம் அவர்கள் தனித்துவத்துடன் வெளியீட்டுரையாற்றினார். ஆய்வுரைகளை பிரபல பேச்சாளர் திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்களும் நூலாசிரியரின் பழைய மாணவர் திரு. ஆ. பாஸ்கரதாஸ் அவர்களும் மிகவும் ஆழமாக மேம்பாட்டுடன் செய்திருந்தார்கள். நூலாசிரியர் வித்துவான் ஆ.தா. ஆறுமுகம் அவர்களது ஏற்புரை கச்சிதமாய் அமைந்தது. முதற்பிரதியை நூலாசிரியரின் உறவில் முதியவரும் சபையோர்க்கு முதிய உறவினருமாகத் திகழ்ந்த திரு. எஸ். சபாரத்தினம் அவர்கள் பெற்றுக் கொண்டார். சேர்ந்த முழுத் தொகையான 1625 டாலர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதியிடம் வழங்கப்பட்டது. திருமதி ஜெபாலினி பிரணவன் (மேடைக்) கூச்சமின்றி நன்றி கூறிப் பணிந்தார்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 200வது இதழ் மலர்வு வைபவம்

# இருநூறு இதழும் திருவின் பணியும்!



புதியபாரதி
**தீவகம் வே. இராஜலிங்கம்**

அன்னம்போல் நடந்து வந்து
அழகொடு இருநூ றாக்கி
குன்றிலே தகவல் வைத்துக்
கொஞ்சுமண் நினைப்பே பற்றி
மன்றிலே இனத்துள் நின்ற
மாண்பினர் பணியை எண்ணி
ஒன்ராறி(யோ) விருது வந்தே
உயர்ந்தது திருவே வாழ்க!

ஒன்ராறி(யோ) விருது கண்ட
உயர்பணி பணியின் சின்னம்
மன்றுளே கல்வி மாந்தர்
மாண்பிடும் திருவின் எண்ணம்
என்றுமாய் தமிழாய் வாழும்
இதயமே நெஞ்சக் கிண்ணம்
நன்றென விளங்கும் வண்ணம்
நாடெலாம் வியந்து போற்றும்!

பனங்காட்டான் அஞ்ச மாட்டான்
பட்டதைச் சொல்வான் என்றும்
இனம்காட்டும் தமிழர் மன்றை
எண்ணியே துணிந்து சொல்வான்
மனம்காட்டிச் செயல்கள் காட்டி
வரைவொடு ஆய்வு நல்கும்
கனடாபொன் திருவே என்ற
காதலால் வாழ்த்து கின்றோம்!

றஞ்சியும் திருவும் என்ற
நல்லவர் பணியில் இன்று
அஞ்சலாய் தமிழர் தகவல்
அறுகுபோல் தழைத்த காலை
துஞ்சிடா துழைப்போர் கூட்டம்
திருவிழாப் போலே ஆக்கி
விஞ்சிடும் நாளைக் கண்டார்
வெற்றியின் படியைத் தொட்டார்!

தாயக நினைவுக் காலம்
தாங்கியே வாழும் செம்மல்
சேயவன் கொடிய ராலே
செத்தவப் போதும் வெந்த
தூயனின் நினைவுக் குள்ளும்
தேசத்தின் மனதி னோடு
ஆயனாய் திருவே காட்டும்
அரும்பணி வாழ்த்து கின்றோம்!

# தமிழர் தகவல் வெளியீடு மிகப்பெரிய ஒரு சாதனை!



எழுத்தாளர்
**அ. முத்துலிங்கம்**

தலைவருக்கும், பெரியோர்களுக்கும், தாய்மாருக்கும், இங்கே வந்திருக்கும் சபையோருக்கும் என் நன்றி.

அறிஞர்களும் பெரியோர்களும் கல்விமான்களும் கூடியிருக்கும் இந்தச் சபையிலே தமிழர் தகவலின் 200வது இதழை வெளியிடும் கௌரவத்தை எனக்குக் கொடுத்த திரு திருச்செல்வத்துக்கும், றஞ்சி திருவுக்கும் தமிழர் தகவல் ஆலோசனைக் குழுவுக்கும் முதலில் என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

200வது இதழ் என்று சொல்லும்போது 16 வருடம் எட்டு மாதங்கள் கடந்திருக்கிறது என்ற விசயம் பிரமிப்பூட்டுகிறது. ஏனென்றால் இந்த நாட்டில் பல பத்திரிகைகளும் இதழ்களும் தோன்றி ஒன்றிரண்டு மாதங்களிலேயே நின்றுவிடுவதை நாங்கள் கண்டிருக்கிறோம். ஆனால் இங்கே தரம் குறையாமல், அதில் வரும் விசயங்கள் சலித்துப் போகாமல், தரமான அச்சில், நல்ல தாளில் மாதா மாதம் சரியாக 5ம் திகதிக்கு ஒரு இதழைக் கொண்டு வருவதென்பது சாதாரண காரியமா? அர்ப்பணம், விடாமுயற்சி, கடின உழைப்பு இருந்தபடியால் தான் இது சாத்தியமாகி இருக்கிறது. அதற்காக ஆசிரியர் குழுவையும் அதில் பங்காற்றிய எழுத்தாளர்களையும் மற்றும் அச்சடித்தவர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள் என்று அனைவரையும் இந்தச் சமயத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை மிகப் பெரிய சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழர் தகவல் பல விசயங்களை உள்ளடக்கியது. பலதரப்பட்ட நிகழ்கால தகவல்களை எளிமையாக அவ்வப்போது தருவது. அதுமட்டுமல்லாமல் அரசியல், கல்வி, குடிவரவு, இலக்கியம், மொழிபெயர்ப்பு, சமயம், விளையாட்டு, வணிகம், விஞ்ஞானம் என்று பலதுறைகளிலும், பலதரப்பட்ட வாசகருக்கும் பயனுள்ளதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே எழுதிய பலர் இன்று புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விளங்குகிறார்கள். பலருடைய புத்தகங்கள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன; சில இனிமேல் வெளிவரவும் உள்ளன. சில குடும்பத்தில் கணவன் மனைவி பிள்ளைகள் என்று எல்லோருமே எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில் தமிழர் தகவல் புலம்பெயர்ந்த மக்களிடையே பெரிய விழிப்புணர்வையும், சிந்தனையையும் வளர்த்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது தவிர இளைஞர்களும், பள்ளிச் சிறார்களும் கூட பயனுள்ள கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வருகிறார்கள். எதிர்காலச் சந்ததியினருக்கும் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கு கிடைத்த ஒரு சிறந்த சாதனமாக தமிழர் தகவலை கொள்ள வேண்டும்.

தமிழர் தகவல் கனடாவில் வெளியிடப்பட்டாலும் இதிலே வரும் பல விசயங்கள் எல்லோருக்கும் பொதுவானது. இந்த இதழ் கனடாவில் மட்டுமல்லாது ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் வாசிக்கப்படுகிறது என்றுதான் நான் நினைக்கிறேன். எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்து இதைச் சொல்லுகிறேன். லண்டனில் இருந்து தொலைபேசியில் அழைத்த ஒருவர் தமிழர் தகவல் கட்டுரை பற்றி என்னிடம் விசாரித்த போது அது எனக்கு தெரிய வந்தது. இந்தியாவில் இருந்து இங்கு வந்திருந்த பிரபல எழுத்தாளர் வெங்கட் சாமிநாதனிடம் நான் ஒரு தமிழர் தகவல் மலரைக் கொடுத்தபோது அவர் அதை வாசித்துப் பார்த்துவிட்டு இன்னும் பல இதழ்களைக் கேட்டு வாங்கிப் போனார். சென்ற மாதம் என்னுடைய நண்பர் அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கே வந்திருந்தார். அவர் குறிப்பிட்ட

(31ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Kalaimanram Niruththa Niraignar Graduation 2007















பரதக்கலை வித்தகர் நிறைஞ்சனா சந்துரு அவர்க
விழா கடந்த மாதம் 8 திகதி நோர்த்யோர்க் 
நடனத்தில் ஆசிரிய தராதரப் பரீட்சையில் சித்தி
வழங்கும் இந்நிகழ்ச்சி 2005 ஆண்டில் ஆரம்பி
பதினொரு மாணவர்கள் இந்தப் பட்டத்தைப் பெற்
விழாவில் ருக்ஷா சிவானந்தன், சிந்துஜா நடேச
மேலும் நான்கு மாணவர்கள் பரீட்சையில்
மதிப்பளிக்கப்பட்டனர. பட்டமளிப்பு வைபவம் த
திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. தமி
தொடர்ந்து கலைமன்ற முதல்வர் நிறைஞ்சனா ச
இரு மாணவிகளையும் கவிஞர் வி. கந்தவனமும்
அறிமுகம் செய்து உரையாற்றினர். பிரபல நாட்
பாலசுந்தரம், திருமதி கந்தவனம், திருமதி பாலசுந்
ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்
மாணவர்கள் அனைவரும், அவர்களின் வகுப்
சான்றிதழ்கள் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டனர்
பள்ளிகளின் ஆசிரியர்களான லலிதாஞ்சனா
ஜெயராஜா ஆகியோர் நிறைஞ்சனா சந்துரு அவர்
பத்திநாதர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினா

**ஒளிப்படங்கள்: பிரான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமன்ற நிருத்திய நிறைஞர் பட்டமளிப்பு














அவர்களின் கனடா கலைமன்ற வருடாந்த பட்டமளிப்பு பார்க் யோர்க்வூட் நூலக அரங்கினில் நடைபெற்றது. ல் சித்தி பெற்றவர்களுக்கு 'நிருத்த நிறைஞர்' பட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் ப் பெற்று ஆசிரிய தராதரம் பெற்றுள்ளனர். இந்த வருட நடேசன் ஆகிய இருவரும் பட்டங்களைப் பெற்றனர். சையில் சித்தியடைந்தமைக்காக பதக்கம் சூட்டி வம் தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். றது. தமிழ் வாழ்த்து, கனடிய கீதம் ஆகியவைகளைத் சனா சந்துரு வரவேற்புரை நிகழ்த்தினார். பட்டம்பெற்ற னமும் ஒலிபரப்பாளர் பொன்னையா விவேகானந்தனும் ல நாட்டியக் கலைஞர் ஜனக் கென்றி, கலாநிதி இ. பாலசுந்தரம், விழாத்தலைவர், அறிமுக உரையாளர்கள் நம் பதக்கங்களும் சூட்டி சிறப்புச் செய்தனர். கலைமன்ற வகுப்புகளின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு பட்டனர். கலைமன்றத்துடன் சேர்ந்து இயங்கும் நடனப் ஞ்சனா கதிர்காமன், வனிதா குகேந்திரன், சிந்துஜா அவர்களால் சிறப்புச் செய்யப்பட்டனர். செல்வி கவிதா ங்கினார்.





பிரான்சிஸ் - A1 போட்டோ







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அண்ணை றைற்' இறுவட்டு வெளியீடு





கலைத்துறைப் பணிக்காக 'தமிழர் தகவல்' விருதும் தங்கப் பதக்கமும் ஏற்கனவே பெற்ற கலைஞர் கே. எஸ். பாலசந்திரனின் 'அண்ணை றைற்' இறுவட்டு வெளியீடு கடந்த மாதம் ஸ்காபரோவில் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் வி. கந்தவனம் வெளியீட்டுரை நிகழ்த்தினார். அந்தணப் பெருமக்களின் ஆசியுடன் பலரது வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. இறுவட்டு வெளிவர உதவிய பி. விக்னேஸ்வரன், எம். ராஜிவ்கரன், 'டிஜி' கருணா ஆகியோர் வைபவத்தில் சிறப்புச் செய்யப்பட்டனர். இவ்விழாவின் சில காட்சிகளை ஒளிப்படங்களாக இப்பக்கத்தில் காணலாம்.














## சிந்து ஸ்ரீஸ்கந்தனின் அரங்கேற்றம்





செல்வி சிந்து ஸ்ரீஸ்கந்தனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் பிராம்டன் றோஸ் தியேட்டர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கலை இலக்கியத் துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் உட்பட பெருந்தொகையானோர் சமுகமளித்திருந்தனர். செல்வி சிந்து கனடிய நாடகப் பரப்பிலும் எழுத்துலகிலும் நன்கு அறியப்பட்டவரான வங்கி முகாமையாளர் ப. ஸ்ரீஸ்கந்தன் தம்பதிகளின் ஏக புதல்வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடிய மத்திய அரசு ஜி.எஸ்.ரி வரியை மேலும் ஒரு சதத்தினால் குறைக்கின்றது. 2008ம் ஆண்டிலிருந்து இந்தக் குறைப்பு அமுலுக்கு வருகின்றது என்று கனடிய நிதியமைச்சர் ஜிம் பிளாகர்ட்டி அறிவித்துள்ளார்.. ஸ்ரீபன் ஹாப்பரின் அரசு ஆட்சிக்கு வந்த முதல் வருடத்தில் இந்த வரியில் ஒரு சதத்தைக் குறைத்தது தெரிந்ததே.

வீதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேகத்திலும் பார்க்க ஐம்பது கிலோ வேகத்துக்கு மேல் வாகனம் ஓட்டுவதற்குக் கடுமையான தண்டம் வழங்கும் சட்டம் அக்டோபர் முதலாம் திகதி அமுலுக்கு வந்தது. முதல் மாதத்திலேயே 1057 அதிவேக சாரதிகள் பொலிசாரிடம் அகப்பட்டு 1000 டாலர் தண்டம் செலுத்தினர். ஒரு வாரத்துக்கு சாரதி அனுமதியும் இடைநிறுத்தப்பட்டது.

ரொறன்ரோ நகரில் பயணிகள் சேவை செய்யும் ரி.ரி.சிக்குச் சொந்தமான 12,000 வண்டிகளிலும் (சப்வே ரயில்கள், பஸ்கள், மின்சார வண்டிகள்) நுண்ணிய கமராக்களைப் பொருத்த முடிவாகியுள்ளது. அடுத்தாண்டில் 18 மில்லியன் டாலர் செலவில் இவை பொருத்தப்படும். ரி.ரி.சி வண்டிகளில் தினமும் பயணிக்கும் 1.5 மில்லியன் பயணிகளை இவை படமெடுத்துப் பாதுகாக்கும்.

கனடிய மக்களில் பதினான்கு வீதமானவர்கள் கடனில் மூழ்கியிருப்பதாகவும் இதற்குக் காரணம் கடன் அட்டைகளே (credit cards) என்றும் புள்ளி விபர இலாகா அறிவித்துள்ளது. வீடுகள் கொள்முதல் செய்வதற்குக் கடன் பெற்றதாலேயே இவர்களுள் 47 வீதமானோர் கடனாளியாகியுள்ளார்களாம்.

ஆள் அடையாளங்களைத் திருடி (personal identity) மோசடி செய்த 7800 பேர் சட்டத்தின் பிடியில் அகப்பட்டு நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளனர். சமூகக் காப்புறுதி அட்டை (SIN). வைத்திய அடையாள அட்டை (OHIP), கடவுச் சீட்டு (Passport) ஆகியவைகளே கூடுதலாகக் களவாடப்பட்டு மோசடிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க பாடசாலை மாணவர்களில் சுமார் முப்பது வீதமானவர்கள் தாவர உணவுப் பிரியர்களாக மாறியுள்ளதாக அந்நாட்டுத் தொலைக்காட்சிச் செய்தியொன்று தெரிவித்துள்ளது. இந்த நிலை மேலும் அதிகரித்து வருவதாகவும், அடுத்த பத்தாண்டுக்குள் ஐம்பது வீதமான அமெரிக்க மாணவர் மாமிசங்களை ஒதுக்கிவிடுவர் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஒன்ராயோ லிபரல் அரசாங்கத்தில் நீண்ட காலம் நிதியமைச்சராகவிருந்த கிரெக் சோபரா புதிய அமைச்சரவையில் இடம்பெற மறுத்துவிட்டார். தமது குடும்ப விடயங்களில் கூடிய நேரத்தை ஒதுக்கவிருப்பதே இதற்குக் காரணம் என்று அவர் அறிவித்துள்ளார், ஆனால், சட்ட விவகாரமொன்றே காரணமென்று 680 AM வானொலிச் செய்தி கூறுகின்றது.

ரொறன்ரோ மேயர் டேவிட் மில்லர் தமது பகீரத முயற்சியால் வீட்டுச் சொத்து வரி, வாகன வரி அதிகரிப்புகளை சபையில் நிறைவேற்றியுள்ளார். இதன்படி வருடச் சொத்து வரி ஆயிரங்களால் அதிகரித்துள்ளது. வாகன உரிமை வரி புதிதாக அறிமுகமாகின்றது. 2008ல் இவை அமுலுக்கு வருகின்றன.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்கக்கூடாது என்று ஜேர்மன் ஆய்வு நிறுவனமொன்று தெரிவித்துள்ளது. இதனால் குழந்தைகள் சிறு வயதிலேயே கண்பார்வையை இழக்க நேருமென்றும், தலைமயிர் உதிர்தல், பற்கள் ஈடாடுதல், போஷாக்கின்மை, நித்திரைக் குறைவு போன்றவைளை இளமையிலேயே சந்திக்க நேரிடுமென்றும் அறிவித்துள்ளனர்.

HERITAGE
Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்கவாதம்...

கட்டுப்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்துக் காணப்படுபவர்கள் தங்கள் குடும்பநல மருத்துவருடன் கலந்தாலோசித்து தகுந்த உணவு ஒழுங்கான உடற் பயிற்சி ஆகியவற்றின் மூலமோ அல்லது அவற்றுடன் சேர்த்து மாத்திரைகள் பாவிப்பதன் மூலமோ கொலஸ்ரோலின் அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பது நல்லது. உயர் குருதியமுக்கம், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களை அழையா விருந்தாளிகளாக இழுத்து வரும் இடைத்தரகர் குருதியில் அதிகரித்துக் காணப்படும் கொலஸ்ரோல் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

**மன அழுத்தம்** (Stress): மன அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பல உயிராபத்தான நோய்கள் ஏற்பட ஒரு தூண்டற் காரணியாக இருக்கிறது. நாளாந்த வாழ்க்கையில் மன அழுத்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததெனினும், மனத்தை வேறு திசைப்படுத்தும் வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் அதன் தாக்கத்தை நிச்சயமாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**பக்கவாதத்தை எப்படிக் குணப்படுத்தலாம்?**: பக்கவாதத்தினால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளை பெருமளவு குறைக்கக் கூடிய மருத்துவ முறைகள் தற்காலத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது என்பது ஒரு நல்ல செய்தியாகும்.
குருதிக் குழாயில் உண்டான அடைப்பினால் ஏற்படும் பக்கவாதத்தை (80 வீதமானோர் இந்த வகையினரே) t-PA என்னும் மருந்தை நாளத்தினூடாக உட்செலுத்துவதன் மூலம் அந்த அடைப்பை ஏற்படுத்தும் கட்டியைக் கரையச் செய்து குணப்படுத்தலாம் அல்லது நிரந்தரமான பாரிய பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கலாம்.

பக்கவாதத்தின் அறிகுறிகள் ஏற்பட்ட 3 மணி நேரத்துக்குள் இந்த மருந்து கொடுக்கப்பட்டால் தான் அதனால் பலன் கிடைக்கின்றது. எந்த வகைப் பக்கவாதம் என்பதை ஸ்கேனிங் பரிசோதனை மூலம் கண்டறிந்து குருதி அடைப்பினால் ஏற்பட்ட பக்கவாதம் தான் அது என்று நிச்சயப்படுத்திய பின்பே இந்த மருந்து கொடுக்கப்பட வேண்டும். குருதிப் பெருக்கினால் ஏற்பட்ட பக்கவாத நோயாளிக்கு இந்த மருந்து கொடுக்கப்பட்டால் பாதிப்பு இன்னும் மோசமாகும். இதன் காரணமாகவே பக்கவாதத்துக்கான அறிகுறிகள் ஏற்பட்ட உடனேயே அவசரகால சேவையினரை 911 என்ற எண்ணில் அழைத்துக் கூடிய விரைவில் மருத்துவ மனையொன்றின் அவசர நோயாளர் பிரிவுக்குச் செல்வது மிக அவசியமாகும். இதனால் அவசியமான பரிசோதனைகளைச் செய்து சிகிச்சைகளை மேற்கொள்ள மருத்துவர்களுக்கும் தாதிமாருக்கும் போதிய அவகாசம் கிடைக்கிறது. மூளைக்கான குருதி வினியோகத்தில் தடை ஏற்பட்ட கால அளவு அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஏற்படும் பாதிப்பும் கூடிக் கொண்டே போகிறது. உடனடியாக சிகிச்சை செய்யப்பட்டால் உயிரிழப்பைத் தடுப்பதுடன் நோயிலிருந்து குணமடையும் வீதத்தையும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இதைவிட பக்கவாதத்தை ஏற்படுத்தும் காரணிகள் பலவற்றைக் கொண்டிருப்பவர்களுக்கு தடுப்பு முறையாகவும் சில மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சில சமயங்களில் சிகிச்சையாக அல்லது தடுப்பு முறையாக அறுவைச் சிகிச்சையும் செய்யப்படலாம்.

**மறுசீரமைப்பு மருத்துவம்** (rehabilitation): பக்கவாதத்தினால் பாதிப்படைந்து உயிர் பிழைத்த நோயாளிகளுக்கு மறுசீரமைப்புச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டியது மிகமிக முக்கியமான ஒன்றாகும். இந்த மருத்துவ முறையால் பக்கவாதத்தின் பாதிப்புக்களை முற்றாக நீக்கி ஒருவரை நோய்க்கு முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வரலாம் என்று கூறுவதற்கில்லை. இந்தச் சிகிச்சை பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமடைந்த ஒருவருக்கு அவரது அன்றாட செயல்களை இன்னொருவரில் தங்கியிராது சுயமாக ஆற்றக்கூடிய வல்லமையையும், ஆற்றலையும், தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்புவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும்.

இதில் அங்க அசைவுகளையும், உடற் சமநிலையையும், பலவீனமடைந்த தசைகளின் பலத்தையும் ஓரளவுக்கு மீளப்பெற்றுக் கொடுக்கக் கூடிய physiotherapy எனப்படும் உடல்கூற்று மருத்துவமும் உடையணிதல், நீராடல் போன்ற நாளாந்த செயல்களை செய்யக்கூடிய வல்லமையைப் பயிற்றுவிக்கும் occupational therapy எனப்படும் தொழிற்கூற்று மருத்துவமும், பேச்சை ஓரளவு புரியக்கூடிய வகையில் பேசுகிற வல்லமையைப் பயிற்றுவிக்கும் Speech therapy எனப்படும் பேச்சு மருத்துவமும் உள்ளடங்கும். இறுதியாக, பக்கவாதம் ஒரு அவசர மருத்துவ நிலையென்பதையும், நோயாளிக்கு மருத்துவம் செய்வதில் ஏற்படும் ஒவ்வொரு நிமிட தாமதமும் பாதிப்பை அதிகப்படுத்தும் என்பதையும் நினைவிலிருத்தி ஒருவருக்கு பக்கவாதத்துக்கான அறிகுறிகள் ஏற்படுமிடத்து 911 ஐ உடனே அழைத்து மருத்துவ மனையைச் சென்றடைவது முக்கியம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நோய் வராமல் காப்பதே சிறந்தது. பக்கவாதம் நம்பக்கம் வராமல் தடுக்கக் கூடிய வழிமுறைகளை மேற்கொண்டு நலமாக வாழ்வோம்.

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW

Tel: 416 265 3456 Fax: 416 265–2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்* 15

எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விடயங்களில் உங்கள் அறிவும் விருப்பும் நன்றாக கூடியிருக்கும் என்பது மாமாவுக்குத் தெரியும். உங்களை அறியாமலே உங்கள் வளர்ச்சி அதிகரிப்பது மிகுந்த பூரிப்பை தருகிறது. பல்வேறு அனுபவங்களை பெற்றுக் கொண்ட நீங்கள் இந்த வாரமும் ஒரு புதிய அனுபவத்தினை பெற்றுக் கொள்ளுங்கள்.

அறிவுள்ள சிட்டுக்களே! உங்களில் பலருக்கு வீட்டு வாசலில் மகிழூந்து நிற்கும். அதில் பாடசாலைக்கு செல்வீர்கள். பலர் பேரூந்து வண்டியில் செல்வீர்கள். உங்களை நடக்க விடுவதென்றால் பெற்றோருக்கு முடியாத காரியம். புத்தக சுமையுடன் ஒரு மலையேறுபவர் போல் நீங்கள் செல்வதே தனியழகு. என்றாலும் நீங்கள் உடல் வருந்தாமல் செல்வதையே பெற்றோர்கள் விரும்புகின்றனர். உண்மையென்னவென்றால் நீங்கள் அந்த சுமையுடன் நடந்து செல்வதால் பல நல்ல விளைவுகளே ஏற்படுகின்றன.

விஞ்ஞான ஆய்வுப்படி நடந்து செல்லும் சிட்டுக்களே கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்பதே உண்மையாகும். நடப்பதனால் உடல் உற்சாகமடைகிறது. சாதாரண உடற்சக்தி இயக்க சக்தியாகின்றது. மூளைக்கு ஒழுங்கான குருதி ஓட்டம் ஏற்படுகிறது, கிரகிக்கும் ஆற்றலும் அறிவைப் பெறும் தன்மையும் கூடுகிறது. இதனால் இவர்களது புத்திக் கூர்மையும் கூடுகிறது. இன்று பல பெற்றோர்கள் பிள்ளைகளை சொகுசாக வளர்ப்பதாக நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் இதனை நீங்கள் சரியாக எடுத்துக் கொள்ளாதீர்கள். பொதுவாக எதற்கும் நடந்து செல்வதினையே இயல்பாகக் கொள்ளுங்கள். தூர இடங்களுக்கு அல்ல. கிட்டிய தூரங்களுக்கு முடிந்தளவு நடந்து செல்லுங்கள்.

நீங்கள் நடப்பதனால் அறிவு மட்டுமல்ல உடலுக்கு பயிற்சியும் ஏற்படுகிறது. கால்களும் கைகளும் வலுப் பெறுகின்றன. தசை நார்கள் மிகவும் பொருத்தப்பாடு அடைகின்றன. மூச்சு உள்வாங்கப்பட்டு சுவாசம் ஒழுங்கு பெறுகின்றது. உடலானது புத்துணர்வு பெறுகின்றது. ஆகவே, உடலும் மனமும் ஒன்றாக சுறுசுறுப்படைய நன்றாக நடை பயிலுங்கள்.

சிட்டுக்களே! நீங்கள் நடக்க சற்று பின்வாங்கி மகிழூந்து, பேரூந்து போன்றவற்றில் செல்லும் போது உடல் எதுவித சக்தியும் பெறுவதில்லை. பத்திரமாக பாதுகாக்கப்படுகிறது. சோம்பேறித்தனம் அதிகமாகிறது. ஜீரணம் குறைந்து போகின்றது. நோய் வந்து சேருகிறது. தேனீக்கள் போன்று மிகவும் சுறுசுறுப்பாக நீங்கள் இருக்க வேண்டின் பாடசாலைக்கு நடந்து செல்லுங்கள். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் நீங்கள் திகழ்வீர்கள்.

அன்பான சிட்டுக்களே! இயற்கை அழகு, சின்னஞ் சிறுசுகளின் தொடர்பு, பறவைகளின் ஒலிகள், பிராணிகளின் நடமாட்டம் எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்டே நீங்கள் நடந்து சென்றால் எவ்வளவு மகிழ்ச்சியான சிட்டுக்களாகி விடுகின்றீர்கள். களைப்பற்ற சுறுசுறுப்புள்ள சிட்டுக்களாகி விடுகின்றீர்கள். உங்கள் பெற்றோர்களே உங்களை நடக்க விடாது முயற்சித்தாலும் நீங்கள் அன்போடு எடுத்துக் கூறி நடந்து பாருங்கள். உங்களை உற்சாகமாக வந்து அணைத்துக் கொள்வேன் என்று கூறி செல்லுங்கள். வருங்காலத்தில் உடல் வலுவுள்ள சிட்டுக்களாகி உளவலுவுள்ளவர்களாகவும் மாறி விடுவீர்கள். நீங்கள் மலையில் ஏறுவது மட்டுமல்ல மைல் கணக்கில் கூட நடப்பீர்கள் - உங்களால் முடியும் - செய்து பாருங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**





**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**

**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**

**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**

**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**

**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- Social Assistance receipients
- EI - currently receiving / received receipients
- Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஜேர்மனியில் 'வெற்றிமணியி'ன் சிவத்தமிழ் விழா


ஜேர்மனியின் ஹம் நகரில் செப்டம்பர் 22 திகதி அன்று சிவத்தமிழ் ஆன்மீகச் சஞ்சிகை நடத்திய சிவத்தமிழ் விழா சிற[?"ற நடந்தேறியது. விழாத் தலைவர் மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களான திரு இரா. நாகலிங்கம் (தாயக கல்வி மேம்பாட்டு பேரவையின் ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர்) சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக் குருக்கள் அவர்களும் மங்கல வாத்தியங்கள் முழங்க விழாவுக்கு வருகை தந்தவர்களுடன் ªமண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அமைதி வணக்கம், தேவாரத்துடன் டாக்டர் சி. ஜீவகன் திருமதி யாமினி ஜீவகன் அவர்களால் மங்கல விளக்கேற்றப்பட்டு, வரவேற்புரையுடன் "துர்க்கா பூஜா துரந்தரர்" சிவ ஜெயந்திநாத சர்மா (ஷ்வெற்றா ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலயம்) "ஆன்மீகத் தென்றல்" த. புவனேந்திரன், "கிரிஜா குருமணி" இரா. சுப. சபாநாதக் குருக்கள் (கற்றிங்கன் வரசித்தி விநாயகர் ஆலய குரு) வாழ்த்துரைகளுக்குப் பின் ªதிரு. பொ. கனகசபாபதியின் தலைமை உரையுடன் சிறப்பு விருந்தினர் திரு இரா.நாகலிங்கம் அவர்களுக்கு "நற்றமிழ்க் குருமணி" என்னும் பட்டத்தை திரு பொ. கனகசபாபதி அவர்களும் "பக்குவத் திருமணி" என்னும் பட்டத்தை சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக் குருக்கள் அவர்களுக்கு நெதர்லாந்து தி. சோமஸ்கந்தக் குருக்களும் வழங்கி அவர்களின் சேவையைக் கௌரவித்தனர்.

அதிசய உலா, சிவத்தமிழ், நூல்களுடன் நவஒலி ஒலிப்பேழையும் வெளியிடப்பட்டன. சிறுவர் கலை நிகழ்ச்சிகள் சபையோரை மிகவும் கவர்ந்தன. ஒவ்வொரு கலை நிகழ்ச்சிகளையும் சபையோர் மிக அமைதியாகவும் ஆர்வத்துடனும் இருந்து ரசித்தார்கள். கனடாவில் இருந்து வருகை தந்த விழாத் தலைவர் திரு பொ. கனகசபாபதி அவர்கள் அங்கு கவி படித்த, உரை நிகழ்த்திய மாணவிகளது தமிழ் உச்சரிப்பு தாயகத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளைப் போல் இயல்பாக இருந்தது என்றார். உண்மைதான் தாயகத்தில் பிறந்த பிள்ளைத் தமிழ் அல்லவா! பிள்ளைகளுக்கு பாராட்டையும், அவர்களின் பெற்றோர்களுக்கும், தமிழ் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களுக்கும் நன்றி கலந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டார். 'நற்றமிழ்க்குருமணி" இரா.நாகலிங்கம் ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் தாயகத்தில் கல்விப் பணி செய்வது சுலபம். ஆனால் இங்கு அவர் ஆற்றியிருக்கும் பணி சாதாரணமானது அல்ல. இதனை அங்கும் இங்கும் பணியாற்றியவன் என்றவகையில் உணர்ந்து கூறுகின்றேன் என்றார். "பக்குவத் திருமணி" சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக் குருக்கள் அவர்களது உள்ளம் சேவையால் நிறைந்தது. அது ஆண்டவனில் தொடங்கி தாயகத்தில் நலிந்த மக்கள் வரை செல்கிறது என்றார். மொத்தத்தில் சிவத்தமிழ் விழா சிறுவர் மகிழும் திருவிழாவாகவும், பெரியோரை வாழும் போதே கௌரவிக்கும் விழாவாகவும் அமைந்தது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Jude**

**Anthonypillai** LL.B. (Canada)

Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**

கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**

**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5

# ரொறன்ரோ போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பு!

ரொறன்ரோ மாநகர போக்குவரத்து சபையான ரிரிசி (Toronto Transit Commision) இநதமாதம் 4ம் திகதி தொடக்கம் கட்டணங்களை அதிகரித்துள்ளது. புதிய கட்டண விபரம் வருமாறு:

| பெரியவர்கள் | முனம்னைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|
| காசு | $2.75 | $2.75 |
| அனுமதிச் சீட்டு/ரோக்கன் | $2.10 | $2.25 |
| மாதாந்த அட்டை | $99.75 | $109.00 |
| எம்.டி.பி | $91.50 | $100.00 |
| வாராந்த அட்டை | $30.00 | $32.25 |
| **முதியோர்/மாணவர்கள்** | | |
| காசு | $1.85 | $1.85 |
| அனுமதிச் சீட்டு/ரோக்கன் | $1.40 | $1.50 |
| மாதாந்த அட்டை | $83.75 | $91.25 |
| எம்.டி.பி | $76.75 | $84.00 |
| வாராந்த அட்டை | $23.75 | $25.50 |
| **குழந்தைகள்** | | |
| காசு | $0.70 | $0.70 |
| அனுமதிச் சீட்டு/ரோக்கன் | $0.47 | $0.50 |

# ஆரோக்கியக் குறிப்புகள்

மூளையைக் கசக்கத் தேவையில்லாத உள்ளெடுக்கும் கலோரிகளின் அளவைக் குறைக்கும் வழி!

நாளாந்தம் அருந்தும் குளிர்பானங்களின் மூலம் எத்தனை வீதம் கலோரிகளை நாம் பெறுகின்றோம் தெரியுமா? மூன்று வீதம்? பத்து வீதம்? இல்லை, இருபது வீதமான கலோரி அளவினை அதாவது ஐந்தில் ஒரு பங்கினை நாம் பானங்கள் வாயிலாக உள்ளெடுக்கிறோம்.

இதோ இதைத் தடுப்பதற்கான இலகுவான வழி: சோடா பானங்கள் (டயட் பானங்களும் தான்), பழரசங்கள், பெரிய அளவிலுள்ள "உடலாரோக்கிய" ஸ்மூதீஸ் எனப்படும் கிட்டத்தட்ட 120 கிராம் சீனி சேர்ந்த பானங்கள், விப் கிறீம் சேர்ந்த கோப்பி பானங்கள், கோர்ன் சிரப் சேர்த்த குளிர் தேநீர், சீனியையும் கலோரிகளையும் உள்ளடக்கிய விளையாட்டுகளில் ஈடுபடுவோருக்கான பானங்கள், விற்றமின் பானங்கள் போன்றவற்றை அருந்துவதை நிறுத்துங்கள்.

எது அருந்த உகந்தது? தண்ணீர். காலையில் கோப்பி தேவைப்பட்டால் ஒரு கோப்பை அருந்துங்கள். அதனுடன் சேர்க்கும் கலவைகளை தவிர்த்தல் நலம். மதிய நேரங்களில் ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்தால், சோடா அல்லது சக்தி தரும் பானங்களிற்கு பதிலாக ஒன்றுமே சேர்க்காத ஒரு பச்சை தேநீர் (Green Tea) அருந்துங்கள். அல்லது தண்ணீரையே பருகுங்கள். போரடித்தால் ஒரு எலுமிச்சை துண்டினையோ அல்லது கிரான்பெரி பழரசத்தில் சிறிதளவினையோ கலந்து பருகுங்கள். தாராளமாக நீர் அருந்துவது சிறந்த ஆரோக்கியத்திற்குப் பல வழிகளில் உதவுகிறது:

* ரொக்சின்களை அகற்றும்
* இருதயவலி வரும் ஆபத்தினைக் குறைக்கும்
* தசை, மூட்டுவலிகளை குறைப்பதில் உதவும்
* உடற்சக்தி எரிவலுவைக் கூட்டும் (Metabolic rate)
* உடலுறுப்புகளின் வேலைத்திறனை அதிகரிக்கும் (Organ function)
* கழிவகற்றலில் கைகொடுக்கும்
* தலையிடிகள் வராமல் தடுக்கும்
* தரமான தோலுக்கு உத்தரவாதம்
* உடல்வெப்பத்தை சீராக்கும்
* உடல்வலுவுடன், விழிப்புணர்வையும் அதிகரிக்கும்

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்!
கலோரியை குறைப்போம். உடலுக்கு நன்மை செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 6

சங்கம் மருவிய காலத்தில் தமிழ்மொழி

சங்க காலத்தை அடுத்து சங்கம் மருவிய காலம் தொடங்குகிறது. தமிழ் மொழி களப்பிரர் ஆட்சியிலும் முற்காலப் பல்லவர் ஆட்சியிலும் வலுவிழந்தது.

களப்பிரர், முற்காலப் பல்லவர் இருவரும் அரசியலில் தமிழைவிட வடமொழிக்கு முதன்மை இடம்கொடுத்தனர். காரணம் இவர்கள் தமிழர் அல்லர் என்பதும் தமிழகத்துக்கு வெளியே இருந்து வந்த பிற இனத்தவர் என்பதேயாகும்.

சங்ககால முடிவில் தமிழக அரசியலில் இருள் சூழ்ந்தது. சமயத்துறையில் பொறுதி மறைந்து காழ்ப்புணர்ச்சி தலையெடுத்தது.

வரலாற்று ஆசிரியர்கள் களப்பிரர் காலத்தை தமிழகத்தின் இருண்ட காலம் எனச் சித்திரிக்கிறார்கள். அதற்குக் காரணம் களப்பிரர் என்ற அயல்நாட்டவரது படையெடுப்பு அல்லது ஊடுருவல் காரணம் என்கின்றனர்.

இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழகத்தில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலை கன்னட நாட்டுக் களப்பிரர் படையெடுக்க சாதகமாக இருந்தது. களப்பிரர் படையெடுத்து வந்தபோது தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய அரசர்கள் பெயர் தெரியவில்லை. இருப்பினும் களப்பிரர் மூவேந்தர்களையும் அவர்களுக்குக் கீழ் ஆட்சி செய்த குறுநில மன்னர்களையும் அடக்கி வெற்றி கொண்டனர் என்பது தெரிகிறது.

வேள்விக்குடிப் பட்டயம் களப்பிர மன்னர்களை (பாண்டியர்களால் 9ம் நூற்றாண்டில் வழங்கப்பட்டது) கடுமையாகக் கண்டிக்கிறது. அப் பட்டயம் அவர்களை கலியரசர் என இழிவாக அழைக்கிறது.

"களப்பிரர் தங்கள் வாள் வலிமையால் பல மாமன்னர்களைப் புறங்கண்டார்கள் என்றும் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் தானம் செய்யப்பட்ட தேவதானங்களையும் பிரமதேயங்களையும் கைப்பற்றி சமூக ஒழுங்கைக் கெடுத்தார்கள்" என்று பறையறைகிறது.

**"The Velvikudi grant of the Pandyas (Ninth century) denounces them as evil kings, kali-arasar, whose invincible arms uprooted many adhirajas and upset the social order confiscating all charitable devadanas and brahmadeyas - gifts to gods and Brahmins."** (Political History of Tamilnadu by K.A. Neelakanda Sastri - South Indian Studies - page 136).

மேலும் அதே வேள்விப்பட்டயம் களப்பிரர்களை பாண்டியன் கடுங்கோ போரில் தோற்கடித்து பாண்டி நாட்டை மீட்டான் களப்பிரர் ஆட்சியை அகற்றினான் என்கிறது.

"அளவரிய அதிராஜரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்ரனென்னுங் கலி அரைசன் கைக்கொண்டதனை
நன்கமைந்த மானம் போர்த்த தானைவேந்தன்
னொடுங்கா மன்னரொளி நகரழித்த கடுங்கோ னென்றும்
கதிர்வேற் றென்னான்."

ஆனால் சோழ நாட்டில் களப்பிரர் ஆட்சி 6ம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. களப்பிரர் பற்றிய இத்தகைய கருத்து வழுவானது என்று முன்னாள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் க.ப. அறவாணன் தனது தமிழர் சமுதாய வரலாறு என்ற நூலில் மறுத்து எழுதியிருக்கிறார். அவர் எழுதியிருப்பதாவது -

"களப்பிரர் வருகையால் தமிழர்தம் பண்பாடு அழிக்கப்பட்டதாக வரலாற்றில் எழுதப்படுகிறது. இது பெரும் வழுவாகும். களப்பிரர் காலத்தில் தான் புலால் வேண்டா என்ற போதனா இயக்கம் தோன்றியது. மது வேண்டா எனும் கருத்து உரத்துப் பாடப் பெற்றது. பரத்தமை வேண்டா என்ற அறிவுரை பரப்பப்பட்டது. கொல்லாமை வேண்டா எனும் நெறி எடுத்துரைக்கப் பெற்றது. இவையெல்லாம் தமிழ்ப் பண்பாட்டை கெடுத்த நிகழ்ச்சிகளா? தமிழர்களுக்கு வேண்டாத அறிவுரையா? அல்ல என்பது வெளிப்படை. இவர்கள் காலத்தில் தமிழ் வளர்ச்சி குன்றியது எனக் கூறப்பெறுகிறது. இதுவும் வழுவே."

முனைவர் அறவாணனின் கருத்துப்படி சமணமும் பௌத்தமும் வடநாட்டில் பிராமண ஆதிக்கத்தை எதிர்த்த சத்திரியர்களது எழுச்சியாக விளங்கியது என்றால் தமிழகத்தைப் பொறுத்தவரை (களப்பிரர் ஆட்சி) பிராமணரை எதிர்த்துப் பிராமணர் அல்லாதார் எழுச்சியாக இருந்தது.

முனைவர் அறவாணனின் கருத்திலும் பொருள் இருக்கிறது. சங்கம் மருவிய காலத்திலேயே இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் எழுந்தன. அதற்கு முன்னர் திருக்குறள் உட்பட பதினெண் கீழ்க்கணக்கு என அழைக்கப்படும் அறநூல்கள், அகநூல்கள் எழுதப்பட்டன.

மூவேந்தர் அரசமரபும் சங்ககாலத்து அரசியலும் நீடித்த நிலையை இக் காலத்தில் (சங்கம் மருவிய காலத்தில்) காணலாம். பேரரசர், சிற்றரசர் நிலையிலும் மாற்றமில்லை. மூவேந்தர்களின் வரலாறு வனப்புடையதாகவே இலக்கியம் உணர்த்துகிறது. சோழர்கள் சிதறிக் கிடந்தனர். பாண்டியர்களும் சேரர்களும் அரசியல் வானில் கொடிகட்டிப் பறந்தனர்" என வ.தி. செல்வம் தாம் எழுதிய தமிழக வரலாறும் பண்பாடும் என்ற நூலில் (பக்கம் 151) குறிப்பிடுகிறார்.

தமிழகத்தைக் களப்பிரர் படையெடுத்து வந்து ஆண்டது உண்மை. சரியான காலம் எது என்பதில் தான் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

கி.பி. 4ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அச்சுத களப்பாள மன்னன் காவிரிப் படுக்கையில் உக்கிரபுரத்தைத் தலைநகராக வைத்துச் சோழநாட்டை ஆண்டு வந்தான் என்று புத்ததத்தன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளான். களப்பிரர்களில் ஒரு பிரிவினர் சமணத்தையும் இன்னொரு பிரிவினர் பவுத்தத்தையும் தழுவி இருந்தனர்.

களப்பிரர்களது ஆட்சிக் காலத்தில் சமணர்களின் பள்ளிகளும் சேர்க்கைகளும் மதுரை மண்டலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததாகச் சேக்கிழார் பெரிய புராணத்தில் (திருஞானசம்பந்தர் புராணம் (602)) குறிப்பிடுகிறார்.

பறிமயிர்த் தலையும் பாயும்
பீலியும் தடுக்கும் மேனிச்
செறியும் முக்குடையும் ஆகித்
திரிபவர், எங்கும் ஆகி
அறியுமம் அச் சமய நூலின்
அளவினில் அடங்கிச் சைவ
நெறியினில் சித்தம் செல்லா
நிலைமையில் திகழுங் காலை.

(பாடல் 602)

மயிர் பறித்த தலையும் பாயும் மயில்பீலியும் தடுக்கும் உடம்பில் கூடிய இக் கோலங்கள் சமணத் துறவிகளுக்குரியன. சமணர்களை திருஞானசம்பந்தர் பல இடங்களில் பத்தாம் பாட்டில் அமைத்துப் பாடுவது வழக்கம். (வளரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கலப்பு அங்கத்துவ...

நிமித்தமாக தமக்கான வாக்குச் சேகரிப்பில் மாத்திரம் ஈடுபட்டுள்ளார்களே அன்றி தேர்தல் சீரமைப்புப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லத் தவறி விட்டார்கள் என்பது ஐயம் திரிபறத் தெரிகிறது. தேர்தல் சீரமைப்பு நடைபெற்று கலப்பு அங்கத்துவ விகிதாசார பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் அதிக அளவிலே அனுகூலம் பெறும் கட்சிகளில் முதலாவதாகப் பசுமைக் கட்சியும் அதற்கு அடுத்ததாக NDP யும் இருக்கும். ஆனால் பசுமைக் கட்சி இரண்டாவது இடத்தைப் பிடித்த ஒரே ஒரு தொகுதியாகிய புறூஸ் கிறே-ஓவன்சவுண்ட் தொகுதியில் கூட சீரமைப்பிற்கு ஆதரவு கிட்டவில்லை. 60% இற்கும் அதிகமானோர் சீரமைப்பிற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

ஒன்ராறியோ தேர்தல் ஆணையம் ஏறக்குறைய 68 இலட்சம் டாலரினை இப்போதைய தேர்தல் முறையினுக்கும் (first-past-the-post) கலப்பு அங்கத்துவ விகிதாசார பிரதிநிதித்துவத்துக்குமிடையே உள்ள வேறுபாட்டினை மக்களுக்கு விளக்குவதற்காகச் செலவிட்டுள்ளது. இச்சீரமைப்பினுக்கு ஆதரவாக தீவிரமாகச் செயற்பட்ட அமைப்புகளில் ஒன்றினைச் சேர்ந்த லாறி கோர்டன் ஒன்ராறியோ குடிமக்கள் பேரவை எக்காரணத்திற்காக கலப்பு அங்கத்துவ விகிதாசார பிரதிநிதித்துவம் தேவையென சிபார்சு செய்தது என்பதை தேர்தல் ஆணையம் மக்களுக்கு விளக்கத் தவறி விட்டது எனக் குற்றம் சாட்டியுள்ளார். பசுமைக் கட்சி 2003 தேர்தலில் வெறும் 2.3% வாக்குகளைப் பெற்றிருந்தது. அக்கட்சி இம்முறை 8% மக்கள் ஆதரவினைப் பெற்று தானும் ஒரு கவனிக்கப்பட வேண்டிய கட்சியாக உள்ளது எனக் காண்பித்துள்ளது. பசுமைக் கட்சி இந்தத் தேர்தலில் 107 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்துகின்ற அளவினுக்குப் பலம் பெற்றிருந்துள்ளது. அதோடு மாத்திரமல்லாமல் சென்ற தேர்தலின் போது வெறும் நகர மட்டத்திலேயே இருந்த அதன் ஆதரவாளர் பலம் இம்முறை கிராமப் புறங்களுக்கும் வியாபித்திருப்பதைக் காண முடிகிறது. சென்ற 2003ம் ஆண்டிற்கான தேர்தலில் அது போட்டியிட்ட 102 தொகுதிகளில் இரண்டே இரண்டு தொகுதிகளல் மாத்திரம் அதனால் மூன்றாம் இடத்தினைப் பெற முடிந்தது. இம்முறையோ ஒரு தொகுதியில் இரண்டாவது இடத்திலும் 17 தொகுதிகளில் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளதைக் காண முடிகிறது. இவ்வளவு வளர்ந்துள்ள கட்சியின் வேட்பாளர் ஒருவராவது சட்டப்பேரவை புக முடிந்ததா? காலம் வரும் காத்திருப்போம் என அவர்கள் எண்ணினார்களோ? மக்களுக்கு இந்தச் சீரமைப்பு முறை பற்றி ஏன் கூறத் தவறினார்கள்?

நடைபெற்று முடிந்த தேர்தலில், லிபரல் கட்சி 42% வாக்குகளைப் பெற்று 71 தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளது, புதிய கொன்சர்வேற்றிவ் கட்சி 32% வாக்குகளுடன் 26 தொகுதிகளையும், NDP 17% வாக்குகளுடன் 10 தொகுதிகளையும் கைப்பற்ற பசுமைக் கட்சி 8% வாக்குகளைப் பெற்று சட்டப் பேரவையில் அடியெடுத்து வைக்க முடியாத நிலையில் உள்ளது. விகிதாசார முறைப்படி பார்ப்போமாயின் லிபரல் கட்சிக்கு 47 உறுப்பினர்களும், புதிய கொன்சர்வேற்றிவ் கட்சியினருக்கு 34 உறுப்பினர்களும், NDP யினருக்கு 18 உறுப்பினர்களும், பசுமைக் கட்சிக்கு 8 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். லிபரல் கட்சி ஆட்சி அமைப்பதற்காக NDP யின் காலடியில் வீழ்ந்திருக்க வேண்டும். ஹாவார்ட் ஹம்ரன் தொழிலாளருக்கு அடிப்படை ஊதியமாக மணித்தியாலத்துக்கு $10 என்ற நிபந்தனையைக் கேட்க முடிந்திருக்கும்.

பத்திரிகைகள் சாதகமாக இருக்கவில்லை: பத்திரிகைகள் பொதுவாகவே கலப்பு அங்கத்துவர் விகிதாசாரமுறைக்கு எதிராகவே கருத்துத் தெரிவித்தன.

1. ஆட்சி அமைக்கின்ற கட்சி முழுமையான பெரும்பான்மையைப் பெற முடியாது
2. இதனால் வேறு ஏதாவது சிறிய கட்சியுடன் கூட்டரசாங்கம் நடத்த வேண்டிவரும்
3. ஆட்சி நிரந்தரமானதாக அமைய வாய்ப்புக் குறைவு. எந்த நேரம் சிறுபான்மைக் கட்சி விரட்டிக் கொண்டேயிருக்கும்.
4. ஜாதியக் கட்சிகளும் தீவிரவாதக் கட்சிகளும் தோன்றுதற்கு வாய்ப்பு அதிகம்.
5. சிறு சிறு கட்சிகள் பெருமளவிலே தோன்றுதற்கு வழி வகுக்கும்.

இது போன்றவை பத்திரிகைகள் எடுத்துக் காட்டிய குறைபாடுகள்.

ஹாவார்ட் ஹாம்ரன் எமக்கு இன்னொரு 1000 வாக்குகள் மேலதிகமாகக் கிடைத்து அவை பரவலாக்கப்பட்டிருந்தால் இன்னும் 4 தொகுதிகளை அதிகம் பெற்றிருப்போம் என்றார். கட்சிகளின் மாகாணப் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டவர் கட்சி மாறினால் என்ன செய்வது எனக் கூடக் கேட்டுள்ளார்கள். இது எத்தனை முட்டாள்தனமான வினா. மாகாணப் பட்டியலில் இருந்து நியமிக்கப்பட்டவர் கட்சியின் பிரதிநிதியாகவே நியமிக்கப்படுகிறார். ஆகவே, எந்த ஒரு நிமிடத்தில் அவர் கட்சி மாறுகிறாரோ அப்போதிலிருந்தே அவர் உறுப்பினராக இருக்கும் தகுதியையும் இழக்கிறார் என்பது சிறு பாலகனுக்குக் கூட விளங்குகின்ற செய்தி என்பது அவர்களுக்குப் புரியவில்லையா?

இனி என்ன செய்யலாம்?: ஒப்புக்கோடல் மீண்டும் அடுத்த தேர்தலின் போது கொண்டு வரப்படலாம். அப்போ மக்கள் மனம் மாறி சாதகமாக வாக்களித்தால் 2015ம் ஆண்டினிலே விகிதாசார பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வரலாம். ஒன்று மட்டும் நிச்சயம்! இந்த ஒப்புக் கோடல் சட்டப் பேரவைத் தேர்தலுடன் மக்கள் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டால் அவரவர் தேர்தலில் தனது வெற்றி பற்றி முழுமூச்சுடன் போராடுவாரே அன்றி இது பற்றி மக்களுக்கு விளக்க முன்வர மாட்டார்கள். ஆகவே அரசாங்கம் இப்படியான தேர்தல் சீரமைப்பு ஒன்றினைக் கொண்டு வரவேண்டும் எனக் கருதுமாயின் இதற்காகச் சட்டப்பேரவைத் தேர்தலுடன் சேர்ந்து நடத்தப்படாமல் தனியாகவே ஒப்புக் கோடல் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மேலும் 67 தொகுதிகள் என்ற இரண்டாவது நிபந்தனையை நீக்கி விடவேண்டும். மக்குவின்ரியினுடைய புதிய அரசு இதனைச் செய்யுமா? எந்த அரசாங்கமும் தன் தலையில் தானே மண்ணை வாரி இறைக்குமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

### புலம்பெயர்ந்தவர்களுக்கான தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.


**P. Kayilasanathan**
B.A. (Cey) LLB (Cey)

**BARRISTER & SOLICITOR**



குற்றவியல் வழக்குகள், அகதிநிலை விசாரணைகள், மனிதாபிமான விண்ணப்பங்கள், வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல், குடும்ப வழக்குகள், வாகன விபத்து நஷ்டஈடு கோருதல்.

**பொ. கயிலாசநாதன்**
கனடிய பரிஸ்டர்

2401 Eglinton Av. E. Suite #302
(Eglinton / Kennedy)
Scarborough ON M1R 2M5

**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







தொடர்புகளுக்கு:

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்**

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

## தமிழர் தகவல்..

இரண்டு இதழ்கள் வேண்டுமென்று கேட்டார். நான் கொடுத்த போது அவற்றை அவுஸ்திரேலியாவுக்கு எடுத்துச் சென்றார். இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் தமிழர் தகவல் இப்பொழுது உலகளாவிய ரீதியில் வாசிக்கப்படுகிறது; அதன் பயன்பாடும் உலகளாவிய ரீதியில் உள்ளது.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் யாராவது தமிழ் மாணவர் தமிழர்களின் புலம்பெயர்வு பற்றி - அவர்களுடைய வாழ்வுமுறை, சமுதாய மாற்றங்கள், இன்னல்கள், சீரழிவுகள், ஏமாற்றங்கள், சாதனைகள், வெற்றிகள் - ஆராய்ச்சி செய்யும் போது தமிழர் தகவல் இதழ்கள் பெரும் ஆவணப் பெட்டகமாகப் பயன்படும். இந்த சந்தர்ப்பத்தில் நான் திரு திருச்செல்வத்திடமும் அவரைச் சேர்ந்த ஆசிரியர் குழுவிடமும் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். நான் ரொறன்ரோ நூலகத்துக்குப் போய் தமிழர் தகவல் இதழ் வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் கணினியில் தேடிப்பார்த்துவிட்டு அந்த இதழ் வருவதில்லை என்று சொன்னார்கள். எப்படியாயினும் இந்த இதழை நூலகத்தில் மாதா மாதம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

அடுத்ததாக, இணையத்தளத்தில் கடந்த 200 இதழ்களையும் படமாகவோ, எழுத்துருவாகவோ ஏற்ற வேண்டும். அது ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், வரலாற்றில் ஆர்வமுள்ளவர்களுக்கும் பெரும் பயனுள்ளதாக அமையும். அவுஸ்திரேலியாவில் உள்ள ஒருவர் ஒரு தகவல் தேவையென்றால் அவர் ஒருவரையும் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. நேராக இணையத் தளத்தில் போய் அவராகவே வேண்டிய தகவல்களை திரட்டிக் கொள்ளலாம்.

இருநூறு இதழ்கள் என்பது பெரிய மைல்கல். இந்த நல்ல நாளில் மேற்சொன்ன விசயத்தை ஆசிரியர் குழு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இணையத்தில் தமிழர் தகவலை ஏற்றினால் அது கறையான் பிடிக்காது. தொலையாது. கிழியாது. பழுதாகாது. என்றென்றைக்கும் படிக்கப் போகும் ஒருவருக்காக காத்திருக்கும்.

இறுதியாக தமிழர் தகவலின் 200வது இதழை வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.



"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

**வீடு வாங்கும் உங்கள் ஆசைகளை நிஜங்களாக்கிவிட இன்றே அழையுங்கள்...**

**"Honesty, Integrity, Professionalism"**

**சாள்ஸ் தேவசகாயம் M.A**
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED



Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

# JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555

C: 416 937 9081



**R.R. Rajkumar**

B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வட அமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

*Motor Vehicle Accident*

*Criminal*

*வாகன விபத்து!*

*கிறிமினல்!*

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய




ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

15

# வெள்ளிப் பணம் - டாலர்

அடுத்த மாதத்துடன் 2007ம் ஆண்டு முடிவடையப் போகின்றது. பொருளாதார ரீதியாக இந்த ஆண்டு எவ்வாறு உங்களுக்கு அமைந்தது என்பதனை திருப்பிப் பார்ப்பது எதிர்வரும் ஆண்டில் எவ்வாறு இருக்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தினை மேற்கொள்ள உதவியாக இருக்கும். ஆனால் இப்படியான ஒரு நடைமுறையினை பின்பற்றுபவர்கள் குறைவாகவே காணப்படுவதாக கனடிய புள்ளி விபரம் கூறுகின்ற போதும் இது ஒரு அவசியமான செயல்பாடு என நிதி ஆலோசகர்களால் வலியுறுத்தப்படுகின்றது. கடுமையாக உழைத்தல் என்பதற்கும் அப்பால் செலவுகளை கட்டுப்படுத்துதல், சேமிப்புகளை ஏற்படுத்தல், அதன் பின்னர் தான் அந்த சேமிப்புகளை எவ்வகையான சேமிப்புத் திட்டத்தில் இணைவது என்பதனை மேற்கொள்ள முடியும் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் அவசியமாகின்றது.

செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு முதலாவதாக நாம் செய்ய வேண்டிய முதல் செயல்பாடாக நாம் மேற்கொள்ளும் செலவுகளையும், எமது வருமானத்தினையும் குறித்து வைத்து பழகுதல் அவசியமாகின்றது. இதன் மூலம் மாத முடிவில் எவ்வாறு குடும்ப வரவு செலவுத்திட்டம் இருந்தது என்பதனை கணிக்க முடியும்.

அடுத்த நிலையாக ஏற்பட்ட செலவுகளை வகைப்படுத்துதல் அவசியமாகின்றது. உணவுக்காக செலவு செய்யப்பட்ட தொகை, வாடகைக்கு அல்லது ஈட்டுக்கடன்கள், போக்குவரத்துச் செலவுகள், உடைகளுக்கான செலவுகள், பிள்ளைகளின் கல்விக்கான செலவுகள் இப்படியாக பட்டியல்கள் நீண்டு செல்லும். ஆனால் உங்கள் செலவுகள் உங்கள் வருமானத்துக்குட்பட்டுள்ளதா என்பதினை கவனத்தில் கொள்ளுங்கள். இதனை வாசிக்கும் பொழுது நீங்கள் நினைக்கலாம் எவ்வாறு நாம் வருமானத்துக்கு மேலதிகமாக செலவுகளை செய்ய முடியும் என்று. அதற்குத்தான் இருக்கிறது எங்களை அறியாமல் எம்மை கடன்காரராக்கும் கடன் அட்டை இருப்பதினால் நாம் வரவுக்கு மீறி செலவுகளை மேற்கொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

எதிர்பாராதவிதமாக மேலதிக கடன் அட்டையின் மாதாந்தம் வரும் Statement என அழைக்கப்படும் கடிதம் வந்தவுடன் நீங்கள் கடன் அட்டை மூலம் ஏற்பட்ட செலவுகளும் Statement உம் சரியாக உள்ளதா எனப் பாருங்கள். குறிப்பிட்ட திகதிக்கு முன் குறைந்த தொகையை (Minimum payment) யாவது திரும்ப செலுத்தி விடுங்கள். உங்கள் கடன் அட்டைக்கு எவ்வளவு வட்டி செலுத்துகின்றீர்கள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் அவசியம்.

பொதுவாக செலவுகள் வருமானத்தினைவிட அதிகரிக்கும் போது அதற்கு தற்காலிகமாக ஆறுதல் அளிக்கும் நண்பனாக கடன் அட்டைகள் இருக்கின்றன. ஆனால் தொடர்ந்து இப்படியாக பல மாதங்கள் தொடருகின்ற போது இதற்கான தீர்வை நாம் மேற்கொள்ளாமல் நாம் காலத்தினை நீடிக்கின்ற போது எம்மை அறியாமல் எம்மீது சுமைகள் ஏற்றப்படுகின்றன என்பதனை எம்மில் பலர் உணர்வது குறைவு.

எல்லோருக்கும் எதிர்பாராதவிதமாக வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உண்டு. ஆனால் ஒவ்வொரு மாதமும் இப்படியான நிலை ஏற்படமாட்டாது. இப்படியான நிலைகள் ஏற்படும் போது அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகளை கண்டறிந்து வரவுக்கு மீறிய செலவுகளை கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவது ஆரோக்கியமான நிதி நிலைமைகளை பேண உதவியாக அமையும்.

குடும்ப வரவு செலவுத் திட்டத்தில் அடுத்தபடியாக ஒரு மாதத்திற்கு ஏற்படும் செலவை கணக்கில் கொண்டு திட்டமிட்டு ஒவ்வொரு வகையான செலவுகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முன்னேற்பாடான திட்டங்களை மேற்கொள்வது சிறந்த நடைமுறையாக கொள்ளப்படுகின்றது. மாதாந்த உணவுக்கு, உடைக்கு, வாடகைக்கு, போக்குவரத்துக்கு போன்ற பலவகையான செலவுகளை பட்டியல் இட்டு அவற்றின் செலவுகளை வரையறுத்து தேவையற்ற செலவுகள் ஏற்படுகின்றதா என்பதனையும் கவனத்தில் கொண்டு மாதத்தில் ஒரு தடவையாயினும் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் கலந்துரையாடி குடும்ப நிதித்திட்டமிடலை மேற்கொள்வது வறுமையிலும் செழுமையாக வாழ வகை செய்யும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# நவம்பர்
# முதலுதவிச் சிகிச்சை மாதம்

**NOVEMBER IS CPR MONTH**

**YOUR HUSBAND STAGGERS TOWARD YOU CLUTCHING AT HIS CHEST. IS HE:**

a) Missing you X
b) Having heart burn X
c) Suffering a heart attack ✓

People suffering from a heart attack may deny that anything is wrong. Know how to recognize a heart attack and administer CPR.

Canadian Red Cross

Be the Somebody that saves a life. Learn CPR. Test your CPR knowledge on-line and register for a chance to win a **FAMILY FIRST AID KIT**!

www.redcross.ca

**NOVEMBER IS CPR MONTH**

**YOUR HUSBAND STAGGERS TOWARD YOU CLUTCHING AT HIS CHEST. IS HE:**

a) Missing you X
b) Having heart burn X
c) Suffering a heart attack ✓

People suffering from a heart attack may deny that anything is wrong. Know how to recognize a heart attack and administer CPR.

Canadian Red Cross

Be the Somebody that saves a life. Learn CPR. Test your CPR knowledge on-line and register for a chance to win a **FAMILY FIRST AID KIT**!

www.redcross.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org